Registered as a Newspaper     பக்கங்கள் 6     விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     மக்கள் நாளிதழ் Peoples Daily

நாதம் 5     திருவள்ளுவர் ஆண்டு 2025     சித்திரை 12     (25.4.94)     திங்கட்கிழமை     ஓசை 66

## தனியார் நிறுவனங்கள் உதவியுடன் அதிக மாணவர் பல்கலை அனுமதி

பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளையிட்டு பல்கலைக் கழக அலுவல்கள் அமைச்சு மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதற்கு க.பொ த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் 50,000 பேர் வரை சித்தியடைகின்றனர். ஆனால் இவர்களில் 9,000 பேர் வரை மாத்திரமே அனுமதி பெறுகின்றனர். ஆகக் குறைந்தது மேலும் 1000 பேரையாவது அனுமதிப்பதில் அமைச்சு கரிசனை கொண்டுள்ளது. தனியார் ஸ்தாபனங்களின் அனுசரணையுடன் பல்கலைக் கழக கல்வியை விஸ்தரிக்க முடியும் (6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று மூடப்பட்டிருக்கும்

சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டைப் பதிவுச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும், விசாரணைப் பகுதிச் செயலகமும் திறக்கப்படமாட்டாது என்பதை பொது மக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

# வடக்கு மீதான பாரிய தாக்குதல்; மே மாத இறுதிவரை ஒத்திவைப்பு!

## ஐ. தே. க. தேர்தல் தோல்விகாரணம்

(கொழும்பு)

வட பகுதி மீது இம்மாத இறுதிக்குள் மேற்கொள்ள விருந்த பாரிய இராணுவ நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தென் மாகாணசபை தேர்தலுக்கு முன்னரே இந் நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததாயினும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியினால் இந் நடவடிக்கை மே மாதம் இறுதிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாககொழும்பு வாரப் பத்திரிகை ஒன்றுதெரிவிக்கின்றது.

இப்பத்திரிகையில் மேலும்; வடபகுதி மீது இம்மாத இறுதிக்குள் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் உட்பட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சகல இடங்களையும் கைப்பற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சு திட்டம் தீட்டியிருந்தது. இதற்கு அரசாங்கத்தின் அனுமதியும் கிடைத்திருந்தது. தென் மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த கையோடு இதனை மேற்கொள்ள சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தென்மாகாணசபைத் தேர்தலில் ஐ' தே. கட்சி அடைந்த படுதோல்வியை அடுத்து இவ் இராணுவ நடவடிக்கையில் சற்றுப் பின்னடைவு ஏற்பட்டது.

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருந்தால் சூட்டோடு சூடாக வடபகுதி மீது பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதே நோக்கமாக இருந்தது. இந்த வெற்றியுடன் ஜனாதிபதிதேர்தலையும், அடுத்து பொதுத் தேர்தலையும் நடாத்தி அர [6ஆம் பக்கம் பார்க்க]

## ஐ. தே. க. உட்கட்சி பூசலை தீர்க்க கட்சி உயர்மட்டக்குழு நியமனம்

### செயற்பட தொடங்கிவிட்டதாகவும் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள உட்கட்சி பூசலை தீர்க்கும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன இதன் ஒரு கட்ட நடவடிக்கையாக ஐ, தே, கவைச் சேர்ந்த உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழு செயற்பாட்டையும் தொடங்கி விட்டதாகவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் 'லங்கா தீப' பத்திரிகைக்கு தெரிவித்தார்,

இது ஐக்கிய தேசியக்கட்சிக்குள் எழுந்துள்ள உட்பூசலை ஒழிப்பதற்கான புதிய நடவடிக்கை எனவும் இந்நடவடிக்கை உட்பூசலை முடிவுக்குக் கொண்டுவரும் என நம்பப்படுவதாகவும் மேலும் அவ் அமைச்சர் கூறியுள்ளார்,

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் கட்சிக்குள் உள்ள பூசலை அறிந்து கொண்டு அதற்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது எனவும் இக்குழு சுயாதீனமாக செயற்படும் அதேவேளை கட்சிக் கொள்கைக்கு அமைய முடிவுகளை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்,

தற்போது இக் குழு தனது வேலையை ஆரம்பித்து உள்ளது எனவும் ஓரிரு வாரங்களில் பிரச்சினை சீர்செய்யப்பட்டுவிடும் என தான் நம்புவதாகவும் அவ் அமைச்சர் கூறினார்,

இதேவேளை தனது பெயரை வெளியிட மறுத்த மேற்படி அமைச்சர் இக் குழுவில் எத்தனைபேர் அடங்கியுள்ளனர், அவர்களின் பெயர் விபரங்கள் என்பவற்றையும் கூற மறுத்து விட்டார்,

### மட்டக்களப்பு பகுதியில்

## இரகசிய முகாம்களில் இளைஞர்கள் தடுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பல இரகசியமான இடங்களில் பல தமிழ் இளைஞர்களைத் தடுத்துவைத்துள்ளனர்.

தடுப்பு முகாம்களைப் பார்வையிடச் செல்லும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினதும், மற்றும் மனித உரிமை அமைப்புக்களினதும் பார்வையில் இருந்து தப்பிக்கவே படையினர் மேற்படி ஏற்பாட்டைச் செய்துள்ளனர்.

## செய்திகளை வெளியிடுவதற்கு அமைச்சர்களுக்கு தடை விதிப்பு

### டி. பி. விஜேதுங்கா பிறப்பித்தார்

[கொழும்பு]

தமது சொந்த அமைச்சின் செயற்திட்டங்கள் மற்றும் அவை சார்ந்த செய்திகள் ...

அமைச்சர்களுக்கும் உத்தர விட்டுள்ளார் ...

செய்திகளை மட்டுமே பத்திரிகையாளர் மற்றும் செய்தி ...

## பிரேமா அணியை திருப்திப்படுத்த ஹேமாவுக்கு அமைச்சர் பதவி?

# ஹேமாவுக்கு அமைச்சர் பதவி?

[கொழும்பு]

ஹேமா பிரேமதாசாவுக்கு அமைச்சர் பதவி வழங்குவது குறித்துஜனாதிபதி திரு டி.பி. விஜேதுங்கா திட்டமிட்டு வருவதாக ஏ எவ். பி. செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி திட்டத்துக்காக கடந்த வாரம் ஜனாதிபதி திருமதி ஹேமா பிரேமதாசாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார் என்றும் திரு. பிரேமதாசாவின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தும் முகமாக மேற்படி முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தென்மாகாணசபைத் தேர்தலில் அரசுக்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்தும் எதிர்காலத்தில் வரும் தேர்தல்களில் எதிர்க்கட்சிகளின் சவாலைச் சமாளிக்கும் விதத்திலும் இந்த நடவடிக்கை எடுககப்படவுள்ளது.

திருமதி ஹேமா பிரேமதாசாவுக்கும் அவரது மகன் சாஜித் ஆகியோருக்கு கட்சியில் முக்கிய இடம் வழங்குவதற்காகவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# கூரேயை பதவி விலக ஜனாதிபதி பணிப்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான திரு சிறிசேன கூரேயை தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யும்படி ஜனாதிபதி திரு டி.பி விஜேதுங்கா கோரிக்கை விடுத்துள்ளார் என்று ஏ. எவ். பி. செய்திகள் தெரிவிக்கின்றன.

காமினி திசாநாயக்காவை அமைச்சராக்கும் திட்டத்திற்காகவே திரு. சிறிசேன கூரேயை பதவி விலகுமாறு ஜனாதிபதி கேட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் அரசியல் பொருளாதார திட்டம் தயார்

## கட்சியின் செயலாளர் அறிவிப்பு

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் அரசியல், பொருளாதார அபிவிருத்தித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் டி. மு. ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டங்கள் தொடர்பாக சுதந்திரக் கட்சியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் இணைந்து இத் திட்டங்களைத் தயாரித்துள்ளதாகவும் இது முழுநாட்டுக்கும் செயற்படுத்தும் நோக்கு கொண்ட அரசியல் பொருளாதாரத்தை மையமாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அம் முன்னணியின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் இத் திட்டங்கள் தொடர்பாகமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் மக்களின் ஆலோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# ஆறு கட்சிகள் இணைந்து கொழும்பில் மே தினம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரான ஆறு கட்சிகள் இணைந்து மே தினத்தைக் கூட்டாக அனுட்டிக்கவுள்ளன. இதனை தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவரான அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையிலிருந்து நண்பகலில் ஆரம்பிக்கும் ஊர்வலம் கெம்பல் பார்க்கை வந்தடைந்ததும் எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

வாழ்க்கைச் செலவு உயர்வை எதிர்ப்பதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை வலியுறுத்துவதும் எதிரணி

[6ஆம் பக்கம் பார்க்க]

னர் மேற்படி ஏற்பாட்டைச் செய்துள்ளனர்.

திருக்கோவில், அக்கரைப்பற்று, களுவாஞ்சிக்குடி, காரைதீவு போன்ற படையினரின் முகாம்களில் நிலத்துக்கு கீழ் அமைக்கப்பட்டிருக்கும்

[6ஆம் பக்கம் பார்க்க]

செயற்திட்டங்கள் மற்றும் அவை சார்ந்த செய்திகள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் எவற்றையும் பத்திரிகையாளருக்கோ அல்லது செய்தி நிறுவனங்களுக்கோ வழங்கக் கூடாது என ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா சகல அமைச்சர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகமான சிறி கொத்தவிலிருந்து கிடைத்த செய்திகளின்படி, ஒரு அமைச்சர் தனது அமைச்சு பற்றிய கையாளர் மற்றும் செய்தி நிறுவனங்களுக்கு வழங்க முடியும். ஏனைய செய்திகள் எவற்றையும்வழங்கக் கூடாது என அறிவிக்கப்படடுள்ளது என தெரியவருகிறது.

அமைச்சர்கள் வழங்கும் செய்திகள் தொடர்பாக தாம் மிகுந்த கவனம் செலுத்தப்போவதாகவும் டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார்.

# பாலைதீவில் தொழில் செய்த மீனவர் சிலரைக் காணவில்லை

## ஒருபகுதி காட்டிற்கு கடற்படை தீவைப்பு

(நல்லூர்)

பாலைதீவில் தங்கியிருந்து சிறிய வள்ளங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் சிலருக்கு என்ன நிகழ்ந்தது என தெரியவரவில்லை.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது பாலைதீவில் உள்ள காட்டின்ஒரு பகுதியை சென்றவாரம் அங்கு சென்ற சிறிலங்கா கடற்படையினர் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர் என குருநகர் மீனவர் தெரிவித்துள்ளனர். அத்துடன் இங்கு தங்கியிருந்து சிறிய வள்ளங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் மூன்று வள்ளங்களும் எரிக்கப்பட்டுள்ளன.

மேலும் இக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சில மீனவர்களை பிடித்த சிறிலங்கா கடற்படையினர் மீனவர்களைமிரட்டிவிட்டுவிடுவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வேளையில் அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் சிலரை காணவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன. (17)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

அமரர் ஒறேற்றர் சி, சுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்த துடுப்பெடுத்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிநாள் இன்றாகும்.

இன்று அரைஇறுதிப் போட்டிகளும், இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளதோடு

[6ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியர், ஊழியர் பற்றாக்குறை

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதிமார், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் பரிசாரகர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் யாழ், போதனா வைத்தியசாலை நோயாளிகளுககு ஓர் உன்னத வைத்திய சேவையை அளிக்க முடியாது இருப்பதாகவும் யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் ஒரு வாரத்திற்கு முன்னர் எடுத்த புள்ளிவிபரங்களின்படி வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்களுக்கு இருபத்திஐந்து வெற்றிடங்கள் இருப்பதாகவும் தாதிமார் எண்பத்தி இரண்டு பேரும், குடும்பநல உத்தியோகத்தர் பதினைந்து பேரும், பரிசாரகரின் [ஆண், பெண்] நாற்பத்தியொரு பேருக்கும் வெற்றிடம் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

எனவே இவ்வாறான நிலை தொடர்ந்து போதனா வைத்தியசாலையில் நிலவுமானால் நோயாளர் பாதிப்பு அதிகரிக்கும் என்றும் இதனால் ஒழுங்கான மருத்துவ வசதியி

[6ஆம் பக்கம் பார்க்க]

# மக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தும் இராணுவம்

மன்னார் தீவில் மக்களை சிறிலங்காப் படைகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருவதாக விடுதலைப் புலிகளின் மன்னார் தீவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

மன்னார் தீவில் மக்கள் பயணம் செய்யும் பஸ் வண்டிகளை இடைமறிக்கும் படையினர் அதில் ஏறிக்கொள்கின்றனர் இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். சில சமயம் படையினர் பஸ் வண்டிகளை தமது முகாம்களுக்கு கொண்டு சென்று பலத்த சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

அத்துடன் தாழ்வுப்பாடு இறங்குதுறைப் பகுதியில் உள்ள அகதி முகாம்களுக்கு அண்மையில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதுடன் அங்கிருந்து மக்கள் விரட்டப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வரி விளம்பரம்


## கோல்டன் கொமட் விற்பனை

கோல்டன்கொமட் 10 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள், சேவல்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ''மல்லிகாபதி''சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்(8106)

## பேட்டுக்குஞ்சு விற்பனைக்கு

கைலைன்பிறவுண் 1½ மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்குஒழுங்கை, மானிப்பாய் (8105)

## CRANK & SHAFT

BMC 5 டன் கிறாங்கும் ஷாஃப்றும் புதியது உடன் விற்பனைக்குண்டு மில்க்வைற் 525/2, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். [சி-9238]


## இன்றைய நிகழ்வுகள்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் 'ஐக்கியதீபம்' பத்திரிகை வெளியீட்டு விழா 25ஆம் திகதி திங்கள் [இன்று] காலை பத்து மணிக்கு, மணிக்கூட்டு வீதியில் உள்ள மேற்படி சபை மண்டபத்தில் சபைத்தலைவர் திரு வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும்.

(கொழும்புத்துறை)

சரசாலை இந்துமன்றம் வருடா வருடம் நடாத்தும் சித்திரை மாதப் பூரணைக் கருத்தரங்கு இவ்வருடமும் இன்று காலை 9-30 மணிக்கு சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் சிறப்பாக இடம் பெறும்.

இந்நிகழ்வில் இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் மன்ற ஸ்தாபகர் அமரர் சிவநெறிச் செம்மல் ச. நமசிவாயம் ஞாபகார்த்த உரையினை நிகழ்த்துவார்.

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீஅம்மன் ஐயனார் ஆலய மாதாந்த திருவிளக்குப் பூசை சுமங்கலி பூசை இன்று மாலை ஆறு மணிக்கு இடம் பெறும்.

திருவிளக்குப்பூசை சுமங்கலிப் பூசையை அடுத்து அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (24)

[கொழும்புத்துறை]

சித்திரா பூரணை தினத்தில் இன்று சித்திரைக் கஞ்சி வார்க்கும் வைபவம் கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்

## மே நாளில் அணி திரள கிராமிய உழைப்பாளர் அழைப்பு

தமிழீழ மக்களின் வாழும் உரிமைகளை புறக்கணித்து இனவெறி கொண்டு எம்மை அழிக்கும் நோக்குடன் சிறிலங்கா அரசு பாரிய இராணுவத் தாக்குதலுக்கு தயாராகி வருகின்றது. இவ்வாறு கிராமிய உழைப்பாளர் சங்கம் மேநாள் குறித்து வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது எமது தாயக மண்ணோடு மண்ணாக பிணைக்கப்பட்டு மண்ணையே நம்பி வாழும் உழைப்பாளர்களாகிய நாம் ஒரு அங்குல நிலந்தானும் ஆக்கிரமிப்பாளருக்கு சேர விடப் போவது இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லலித்தை நினைவு கூர காமினி மதச்சடங்கு ஏற்பாடு

லலித் அத்துலத் முதலியின் கொலையின் ஓராண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் நேற்று நடைபெற்ற கிறிஸ்தவ மத நிகழ்ச்சி ஒன்றை தற்போது ஐ தே கவில் இணைந்துள்ள காமினி திஸநாயக்கா ஏற்பாடு செய்திருந்தார்.

லலித் எத்தனையோ வெற்றிகளை பெற்றாலும் ஜனநாயகத்திற்காக துணிந்து எதிர்த்து நின்றதற்காக நினைவு கூரப்படுவார் என காமினி திஸநாயக்கா இந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

1991 செப்ரம்பர் மாதமளவில் ஜனாதிபதி பிரேமதாசவுடனான உறவை முறித்துக் கொண்டு லலித் அத்துலத் முதலியும் காமினி திஸநாயக்காவும் ஐ தே. கவை விட்டு வெளியேறி புதிதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எனும் கட்சியை ஆரம்பித்திருந்தது தெரிந்ததே


மிக விரைவில்...

உங்கள் கண்ணெதிரில்.

போராளிகளும் மக்களும் இணைந்து வழங்கும்

நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடு

## காற்றுவெளி

தரமான கலைப் படைப்பின்

திறமான கருத்தோவியம்

- மக்களோடு புலிகள்
- சண்டைக் காட்சிகள்
- நெஞ்சையுருக்கும் சம்பவங்கள்

உங்கள் இதயங்களில் இடம் பிடிக்கும் இன்னும் பல அரிய கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகள்

மறவாதீர்கள் காற்றுவெளி

தவறாதீர்கள் பார்த்து மகிழ

இது ஒரு நிதர்சனம் தயாரிப்பு

(சி-9234)


யிலுள்ள வேலைகளை நிறைவேற்றும்படியாக மேற்குறித்த சம்பளத்தில் 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

நூலகர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1994-06-17-ம் இதர பத

## அறிவித்தல்

### தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம்

சுந்தரம்பிள்ளை பாலச்சந்திரன்
இல. 41, சோமசுந்தரம் அவனியூ.
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்,
வழக்காளி

வழக்கு இல.
மணவிலக்கு 75 / 94

எதிர்

சுந்தரம்பிள்ளை பாலச்சந்திரன் பெண்
விஜயலட்சுமி
இல 44, தேவாலய வீதி,
மட்டக்குளிய,
கொழும்பு - 15.

எதிராளி

இத்தாற் சகலருமறிக மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் தமக்கும் குறித்த எதிராளிக்கும் இடையே 30-05-1969 திகதியில் நடைபெற்ற திருமணப் பதிவின் மூலம் ஏற்பட்ட உறவை நீக்கி விவாகரத்து வழங்குமாறுகோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்

எனவே வழக்காளியின் கோரிக்கையை இம்மன்று பரிசீலிப்பதற்கு எதிராக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ்வறிவித்தல் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய திகதியிலிருந்து (1) ஒரு மாதகாலத்தினுள் தமது ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளை

பதிவாளர்

1994 ஆண்டு சித்திரை மாதம் 22-ம் திகதி
தமிழீழ மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(8127)


யாழ் இந்து பழைய மாணவர் சங்கம்

நடாத்தும்

## முழுநிலாநாட் கருத்தரங்கு

காலம்: 25-04-1994 திங்கட்கிழமை
பிற்பகல் 3.00 மணி

இடம்: குமாரசாமி மண்டபம்

கருத்துரை 1 இன உரிமைப் போராட்டத்தில் காஷ்மீர்: ஒரு கண்ணோட்டம்

வழங்குபவர்: கலாநிதி எஸ். கே. எஸ் நாதன்
முதுநிலை விரிவுரையாளர்
பொருளியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்

கருத்துரை 2: பிணி நீக்கற் கற்பித்தல் (REMEDIAL TEACHING)

வழங்குபவர்: கலாநிதி சபா. ஜெயராசா
தலைவர், இராமநாதன் நுண்கலைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


## அமெரிக்காவில் குடியேற அதிர்ஷ்ட விசா விண்ணப்பம்

அமெரிக்காவில் குடியேறுவதற்கு அதிர்ஷ்ட விசாவினைப் பெறவிரும்பும் இலங்கையர் அமெரிக்க நிரற்படுத்தும் நிலையத்தில் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் ஜூன் 30 ம் திகதி வரை தமது பதிவை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட கல்வித் தராதரம் உடையவர்கள் அல்லது இருவருட தொழில் அனுபவத்துடன் இருவருட தொழில் பயிற்சி அனுபவமும் பெற்று ஐந்தாண்டு அனுபவம் உடையவர்கள் இப்பதிவை மேற்கொள்ள முடியுமென மேலும் கூறப்படுகிறது

## எங்கள் குலவிளக்கின் 1-ம் ஆண்டு நினைவலைகள்

திதி: 25 - 04 - 1994

மலர்வு:
4 - 11 - 1937

உதிர்வு:
06 - 05 - 1993



அமரர் சின்னப்பு நாகரெத்தினம்
(இராசு ஆசாரியார்)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததையா
நீங்கள் வையகம் நீங்கி
ஆசையுடன் எதிர் பார்த்திருந் தோம் ஐயா
நீங்கள் வருவீர்கள் என்று
வந்தது தான் ஆனால் நீங் ளில்லை
உங்கள் மரணச் செய்திதான்
தந்தது ஆறுதலில்லை தாளாத மனத்துயரம்தான்
ஊரைவிட்டு உறவை விட்டு
பிரிய மாட்டேன் என்றீர்களே, இப்போ
இந்த உலகையே மறந்து நீங்கள்
எங்கே சென்றீர்கள் ஐயா?

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கோவில் வீதி, கட்டைப்பிராய், கோப்பாய். (8125)

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். சகோதரர்கள், உற்றார், உறவினர்.

## நினைவு கூருகின்றோம்.

### 1994-04-25

1986-ம் ஆண்டு மட்டு - வாழைத்தோட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**மதன்** (அருள்நாயகம் தயானந்தராசா-வாகரை-மட்டு)

**கரன்** (வெற்றிவேல்பிள்ளை தம்பிப்பிள்ளை-வெருகல்-திருமலை)

1989-ம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட திருமலை கிண்ணியாவைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்

ஏழாலையில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கட்டுவன்புலம் மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவன்

கர் ஆலயத்தில் விசேட அபிஷேகம் பூசை ஆராதனையை அடுத்து இடம் பெறும் [24)

சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு தாளையடி திருநெல்வேலி ஐயப்பன் ஆலயத்தில் இன்று சித்திரைக் கஞ்சி வார்க்கப்படும்.

[கொழும்புத்துறை]

யாழ் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு நிலையத் தலைவர் திரு. கா. கணேசதாசன் தலைமையில் பூரணைக் கருத்தரங்கு நடைபெறும்,

திரு, வே, யுகபாலசிங்கம் எம். ஏ. அவர்கள் ''எமது மதத்தின் சில அடிப்படை உண்மைகள்'' என்ற தலைப்பில் உரையாற்றுவார். (24)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை மாதாந்த அமர்வு இன்று காலை 10 மணிக்குப் பேரவை மண்டபத்தில் நடைபெறும், பேரவை உறுப்பினர்கள் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்

[கொழும்புத்துறை)

யாழ், எழிலூர் சனசமூக நிலையத்தினரால் முழுநிலாக் கருத்தரங்கு இன்று மாலை 6 மணிக்கு நிலைய மண்டபத்தில் திரு, கி, இசிரேரர் தலைமையில் நடைபெறும்,

''நமக்கு நாமே துணை'' என்ற தலைப்பில் ஓய்வுபெற்ற அதிபர் திரு, கா- கணேசதாசன் உரையாற்றுவார்,

வடலியடைப்பு கும்பந்தவத்தை ஞானவைரவர் ஆலயத்தில் 'தெய்வம் உண்டா' என்னும் தலையங்கத்தில் க. நாகேஸ்வரனின் சிறப்பு சொற்பொழிவு இடம் பெறவுள்ளது அத்துடன் பிரம்மஸ்ரீ வெங்கடேஸ்வர சர்மா, பிரம்மஸ்ரீ மோகன் சர்மா ஆகியோரின் வயலினிசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்மான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்

1. நூலகர்
2. சித்த மருத்துவத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11| விரிவுரையானர் / உதவிவிரிவுரையாளர்.
3. சித்த மருத்துவத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளர்.

## சம்பள அளவுத் திட்டம்

நூலகர் - ரூபா 16 100- 6x400- 18,500/- (மாதம் ஒன்றிற்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 - ரூபா 12,725 - 8x325 - 15,325|-(மாதம் ஒன்றிற்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 - ரூபா 10,650 5x325 - 12,275|- ( மாதம் ஒன்றிற்கு)

விரிவுரையாளர் - ரூபா 6,050 - 10x250 - 8,550|- (மாதம் ஒன்றிற்கு)

உதவி விரிவுரையாளர் ரூபா 5 270 /- (நிலையானது) மாதம் ஒன்றிற்கு

தற்காலிக உதவி விரிவுரையாளர் - ரூபா 5,270/- (நிலையானது) மாதம் ஒன்றிற்கு

குறிப்பு: இத்துடன்

அ) 1993 மே12-ம்தேதிய 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக ரூபா 600|- செலுத்தப்படும்.

ஆ) 1994 டிசெம்பர் 31-ம் தேதி வரை நிலுவை விளுக்கான விண்ணப்ப முடிவு திகதி1994-05-20-ம் ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக் கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் தாபனக் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் விபரங்களையும் படிவங்களையும் பெற விருப்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பதிவாளர் | நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20|- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை | தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1|- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

யாழ்ப்பாணம்.

1994-04-20

சி-9259)


செயலாளர்

பழைய மாணவர் சங்கம்

யா. இ. க.

விளம்பர அன்பளிப்பு:

ஊர்காவற்றுறை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(சி-9242)



# A/L 96

## பிரிவு II

## ஆரம்பம் 30-4-94

(காலை 7 மணி)

| | |
|---|---|
| பொருளியல்:- | மகேந்திரன் |
| கணக்கியல்: | சாம்- |
| வர்த்தகம்:- | தேவா |
| அளவையியல்:- | சோதிலிங்கம் |
| தமிழ் | குழந்தை |
| புவியியல்:- | குணராஜா |
| இந்துநாகரிகம்: | அருள்நங்கை |
| அரசியல்:- | கியூபேட் |
| இந்து சமயம்:- | அருள்நங்கை, கிரிதரன் |
| வரலாறு;- | ஸ்ரீதரன் |
| நாடகமும் அரங்கியலும்:- | மோசேஸ் |
| கிறிஸ்தவம்:- | அருட்சகோதரர் |

உங்கள் அனுமதிகளை 25-4-94 முதல் பெற்றுக்கொள்ளவும்

மேலதிக விபரங்கட்கு:- S. நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளச் சந்தி,

யாழ்ப்பாணம். [சி-9239)


மாணவன்.

1991-ம் ஆண்டு யாழ் காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**குமார்** (மார்க்கண்டு பிறேம்குமார்-விக்காவில் வடக்கு, காரைநகர் யாழ்)

யாழ்-ஊர்காவற்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**கார்த்திக்** (இராஜேஸ்வரன் சந்திரகுமார்-சங்குவேலி தெற்கு, சண்டிலிப்பாய்-யாழ்)

**ராசிக்/ராபிக்** (நாகேஸ்வரக்குருக்கள்-மதனசூதனன்-கந்தசாமிகோவிலடி, இணுவில்-யாழ்)

**மனோஜ்** (அழகன் கருணாநிதி-ஓவாப்பேட் எஸ்டேட் -மலையகம்)

1992 ம் ஆண்டு மணலாறு - கொக்கிளாய்க்கும்-கொக்குத்தொடுவாய்க்குமிடையே எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் வேங்கையன்/ரத்தன்** (மார்க்கண்டு யோகநாதன்-சின்னவத்தை-மட்டு)

**லெப்.செங்கோலன் | தயான்** (தியாகராசா தயாபரன் திருமலை வீதி-மட்டு)

**லெப்.கருணன்/கர்ணன்** (தவராசசீலன் பிரதீபன் -இருதயபுரம்-மட்டு)

**2-ம் லெப்.முத்து| அசந்தன்** (தங்கராஜா மன்மதராஜா)

**கப்டன் சிவராஜன் | சிவராஜ்** (அல்பேட் அருள் சீலன்-பாலையடி-மன்னார்)

மன்னார்-பரப்புக்கடந்தானில் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**சேகர்** [அந்தோனி டேவிற் - ஆட்காட்டிவெளி - மன்னார்]

மட்டுநகரில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த-

**கவியரசன்-பூட்டோன்** [திரவியராசா மனோகரன் புளியந்தீவு மட்டு]

யாழ் - குருநகர்ப் பகுதியில் காவல்கடமையில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கியதில் எமைப் பிரிந்த

**தமேந்தினி** [மஞ்சுளாதேவி பூபாலசுந்தரம் - மாமுனை செம்பியன்பற்று தாளையடி யாழ்]

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(இ-9251)

... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# மாணவர் அரங்கு

## விஞ்ஞானம் O/L

(சென்றவாரத் தொடர்ச்சி)

### பகுதி - C

### விசை

01 ஒய்விலுள்ள பொருளை இயக்க, இயங்கும் பொருளை நிறுத்த திசை திருப்பப் பயன்படும் இழுவை அல்லது தள்ளுகை விசை எனப் படும்,

02 விசை பின்வரும் சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்படுகிறது
1) ஒரு பொருளை இயக்க 2) நிறுத்த
3) திசை திருப்ப 4) வேகத்தை மாற்ற
5) சமநிலையில் வைத்திருக்க

03 விசைக்கு 1] பருமன் 2] திசை
3) பிரயோகப் புள்ளி என்பன உண்டு

04 விசை ஒரு காவிக் கணியம்

05 விசையின் சர்வதேச அலகு நியூட்டன் (N) ஆகும்

6. நிகர்த்த சமாந்தர விசை

அ)




ஒரு தளத்தில் வெவ்வேறு புள்ளிகளில் ஒரே திசையில் ஒன்றுக்கு ஒன்று சமாந்தரமாகத் தொழிற்படும் விசைகள் நிகர்த்த சமாந் தர விசைகளாகும்

ஆ) 1. இரு மாடுகள் வண்டியிழுத்தல்
2. தேர் இழுத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் இவ்விசை செயற்படும்

7. இணை விசைகள்




அ) ஒரு தளத்தில் வெவ்வேறு புள்ளிகளில் ஒன்றுக்கொன்று சமனாக சமாந்தரமாக எதிர்த்திசையில் தொழிற்படும் விசை கள் இணைகளாகும்

ஆ) இணைகள் சுழற்சியை ஏற்படுத்தும்

இ) 1. சுரை [நட்] களைக் கழற்ற
2. நீர்க்குழாய்களின் கைபிடியைத் திறக்கப் பயன்படும்

8. இரு விசைகளின் சமநிலை




1. ஒரு பொருளை இரு விசைகள் சமநிலைப்படுத்தும்பொழுது பின்வரும் நிபந்தனைகள் பேணப்படவேண்டும்
அ) இரு விசைகளும் சமனாக இருக்கவேண்டும்
ஆ) எதிர்த்திசையில் தாக்கவேண்டும்
இ) தாக்கக்கோடு ஒரு தளத்தில் அமையவேண்டும்

9. மூன்று விசைகள் சமநிலைப்படுத்தத் தேவையான நிபந்தனை
★ மூன்றினது தாக்கக்கோடுகளும் ஒரே தளத்தில் அமையவேண் டும்
★ T V அன்ரனா பைப் மூன்று விசைகளால் சமநிலைப்படுத்தப் பட்டிருப்பதைக் காண்க

10. விளையுள் விசை
1. ஒரு பொருளில் தாக்கும் பல விசைகளால் உருவாக்கப்படும் தனி விசை விளையுள் விசையாகும்
2. விளையுள் விசையின் திசையிலேயே பொருள் இயங்கும் அல் லது இயங்க எத்தனிக்கும்

11. நேர்கோட்டில் தாக்கும் விசைகளின் விளையுள்
a) ஒரே திசையில் தாக்கும்போது




விளையுள் விசையின் பருமன் அவற்றின் கூட்டுத் தொகைக்கும் திசை அவ்விசைகளின் திசை யிலும் இருக்கும்.

உ+ம் 40N, 30N விசைகள் ஒரு நேர் கோட்டில் வடக்காக

12. சமனான நிகர்த்த சமாந்தர விசைகளின் பருமன்




அவ்விசைகளின் திசையில் அவற்றின் இடைத்தூரத்தின் நடுப் புள்ளியில் அவற்றின் கூட்டுத்தொகைக்குச் சமனாக அமையும்

குறிப்பு;- சமனற்றதாயின் பெரிய விசையின் பக்கமாக அவற் றின் பருமனின் விகிதத்தில் இடைத்தூரத்தில் அமையும்

உ+ம்




R=9N 6-ல் இருந்து 1m தூரத்தில் விளையுள் அமையும்

13. சாய்வாகத் தாக்கும் விசைகளின் விளையுள்
அவ்விசைகளை அடுத்துள்ள பக்கங்களாகக் கொண்ட இணை கரத்தின் அப்பக்கங்கள் வெட்டும் புள்ளியினூடாக செல்லும் மூலைவிட்டம் பருமனிலும் திசையிலும் விளையுள் விசையை குறிககும்

## மாதிரி வினாத்தாள்

### பகுதி I

01. பின்வருவனவற்றில் சடப்பொருள் என கருத முடியாதது
1) வளி 2) இரசம் 3) வெப்பம் 4) ஆகன்

02. பின்வருவனவற்றில் எந்த ஒன்று சடப்பொருள்களின் வகைகளில் வேறுபட்டதாக காணப்படுவது.
1) நீர் 2) துரிசு 3) வளி 4) காபனீர்ஒக்சைட்டு

03. ஒரேவகையான உணவை கொண்ட கூட்டம்
1) பாண், பருப்பு, எள்ளு 2) மீன், பால், அரிசி
3) உருளைக்கிழங்கு, பாண், கோதுமை 4) பட்டர் சீனி பால்

04. வெப்பசக்தியை அளக்கும் அலகு
1) சதமபாகை 2) பரனைட் 3) கெல்வின் 4) யூல்

05. எந்த ஒரு கணியம் பருமனை மட்டும் கொண்டது
1) விசை 2) கதி 3) இடப்பெயர்ச்சி 4) வேகம்

06. பின்வருவனவற்றில் நீரில் கரையாத பதார்த்தம்
1) $NaNo_3$ 2) $PbCl_2$ 3) KOH 4) $BaCl_2$

07. எல்லா உயிர்க்கலங்களிற்கும் பொதுவான பகுதி அல்லாதது
1) இழைமணி 2) கலச்சுவர்
3) கலமென்சவ்வு 4) கொல்கியுடல்

08. 15 Kg திணிவும் 0.3 $Kgm^{-3}$ அடர்த்தியும் உள்ள திண்மம் ஒன்றின் கனவளவைகுறிப்பது
1) $\frac{0.3}{15}$ 2) $\frac{15}{0.3}$ 3) 15X0.3 4) 15-0.3

09) பச்சயத்தில் காணப்படும் மூலகங்கள்
1) C.H O 2) C,H O.N 3) C,H,N 4) C,H O,N,Mg

10. வாயுக்களின் அடர்த்தியை மட்டும் பாதிக்கும் காரணி
1) வெப்பம் 2) அமுக்கம் 3) வெப்பமும் அமுக்கமும்
4) எதுவுமல்ல

11. வெண்கலம்/பித்தளை ஆகிய இரு கலப்புலோகங்களில் காணப்படும் பொதுவான மூலகங்கள்
1) நாகம் 2) செப்பு 3) தகரம் 4) வெள்ளி

12. வெப்பத்தால் பிரிகை அடையாத பதார்த்தம்
1) HgO 2) $KClO_3$ 3) $CaCo_3$ 4) $K_2CO_3$

13. வளிமண்டல அமுக்கம் கூடும் என நீர் எதிர்பார்க்கும் சந்தர்ப்பம்
1) வளிமண்டல வெப்பநிலை கூடும் பொழுது
2) ஈரப்பதன் குறையும் பொழுது
3) ஈரப்பதன் கூடும் பொழுது

1) a யில் மட்டும் 2) b யிலும் c யிலும் 3) c யில்மட்டும்
4) a யிலும் d யிலும்

16. எக்கலவையின் கூறுகள் பகுதிபட காய்ச்சிவடித்தலினால் வேறாக் கப்படும்
1) இரும்பு + கந்தகம் 2) நீர் தேங்காய்நெய்
3) பாலும் நீரும் 4) சீனி மணல்

17. சூடாக்கும் பொழுது ஊண்கருகும் மணத்தை கொடுக்கக்கூடிய உணவு
1) பாண் 2) பருப்பு 3) அரிசி 4) சீனி

18. வளிமண்டல அமுக்கத்தால் இயங்காத கருவி
1) புகுத்தி 2) நீரியல் நிறுத்தி 3) மைநிரப்பி
4) பானம் உறிஞ்சும் வைக்கோற்குழாய்

19ஆம் 20ஆம் வினாக்களிற்கு இத்தரவை பயன்படுத்துக
மெழுகுதிரிச் சுவாலை ஒன்றின் பகுதிகள் பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது
a- கண்ணிற்கு மட்டுமட்டாக புலனாக கூடிய ஒளிரில்வலயம்
b- மஞ்சள் நிற ஒளிர்வலயம்
c- இருள் வலயம்
d- நீல நிற வலயம்

19. மேற்தரப்பட்ட பகுதிகளில் எரியாத மெழுகாவியை கொண்டபகுதி
1) a 2) b 3) c 4) d

20. பூரண தகனம் நடைபெறும் பகுதிகள்
1) ad 2) ab 3) bc 4) ac

21. சாதாரணமாக கடல் மட்டத்தில் வளிமண்டல அமுக்கத்தை சரி யாக குறிப்பது
1) 760 CMஇரசம் 2) 1013மபா 3) 76 MMஇரசம்
4) 1013 மில்லிபா ர்

22. தகனத்தின்போது நடைபெறாதது என நீர் கருதுவது
1) வளியில் ஒட்சிசன் செறிவு குறைதல்
2) காபனீர் ஒட்சைட்டு அதிகரித்தல்
3) நீராவி குறைவடைதல் 4) மேற்கூறிய யாவும்

23 சமிபாட்டுத் தொகுதியில் முதலில் சமிபாடடையக்கூடிய உணவு
1) தேங்காய் 2) மீன் 3) பாண் 4) பருப்பு

24. ஒட்சிசனை ஒரு மூலகமாக கொண்ட எரிபொருள்
1) மண்ணெய் 2) மதுசாரம் 3) பரவீன் மெழுகு
4) உயிர்வாயு

25 நாம் உண்ணும் சோறு சமிபாட்டுத் தொகுதியில் சமிபாடு அடையாத இடம்
1) வாய்க்குழி 2) முன்சிறுகுடல் 3) இரைப்பை 4) சிறுகுடல்

26 வெப்பப்படுத்தும் போது நிறை அதிகரிக்காத பதார்த்தம்
1) இரசம் 2) காபன் 3) நாகம் 4) மக்னீசியம்

27. சாரடர்த்திப் போத்தல் ஒன்றின் திணிவு Mg ஆகவும் அதை நீரால் நிரப்பி நிறுத்தபோது $M_1$g ஆகவும் திரவம் ஒன்றால் நிர ப்பி நிறுத்தபோது $M_2$g எனில் அத்திரவத்தின் சாரடர்த்தியை குறிக்கும் தொடர்பு
1) $\frac{M_1 - M}{M_2}$ 2) $\frac{M_2 - M}{M_1 - M}$ 3) $\frac{M_2}{M_1 - M}$ 4) $\frac{M_2 - M_1}{M - M_1}$

28. இலிப்பிட்டின் சமிபாட்டில் பங்குகொள்ளும் பதார்த்தம்
1) தயலீன் 2) பித்தம் 3) பெப்சின் 4) அமிலேசு

29 A என்னும் பதார்த்தத்தின் அடர்த்தி Bயின் அடர்த்தியிலும் கூட வாகும். இரண்டிலும் சமதிணிவு எடுக்கப்பட்டால் அவற்றின் கன வளவுகள் பற்றிய சரியான கூற்று
1) இரண்டினது கனவளவுகளும் சமன்
2) Aயின் கனவளவு Bயிலும் கூட
3) Bயின் கனவளவு Aயிலும் கூட
4) எதுவும் கூறமுடியாது

30. அணுவின் கருவில் உள்ள ஏற்றமுள்ள துகள்
1) இலத்திரன் 2) இலத்திரனும் புரோத்தனும்
3) நியூத்திரன் 4) புரோத்திரன்

31. சடத்துவ மூலகமொன்றின் அணு இரண்டு சத்திமட்டங்களை கொண்டது அதன் அணு எண்
1) 8 2) 2 3) 6 4) 10

32) சோடியத்தின் அணு எண் 11 அதன் அணுவிலும் அயனிலும் சம எண்ணிக்கையில் காணப்படக்கூடிய ஏற்றமுள்ளதுகள்
1) இலத்திரன் 2) புரோத்தன்
3) நியூத்திரனும் இலத்திரனும் 4) மேற்கூறிய யாவும்

33. இரண்டு எதிர் வலுவுடைய மூலகம் பற்றிய கூற்றுக்களில் தவ றானது
1) அதன் அணுவின் ஈற்றொழுக்கில் இரண்டு இலத்திரன்கள் காணப்படும்.
2) அதன் அணுவிலும்அயனிலும் சக்திமட்டம் ஒரே எண்ணிக்கை யாக காணப்படும்
3) இது ஒரு அலோகம்
4) இது இரண்டு இலத்திரன்களை ஏற்றுள்ளது

யிலும் இருக்கும்.

உ+ம் 40N, 30N விசைகள் ஒரு நேர் கோட்டில் வடக்காக தாக்கினால்

விளையுள் விசை (R) = 40 + 30
= 70N வடக்கு

$\vec{R} = \vec{P} + \vec{Q}$

b) எதிர்த்திசையில் தாக்கினால்

$\overleftarrow{P} \quad \overrightarrow{Q}$ R = P − Q [P > Q]

விளையுள் விசையின் பருமன் அவற்றின் வித்தியாசத்திற்கும் திசை பெரிய விசையின் திசையிலும் இருக்கும்

2) ஈரப்பதன் குறையும் பொழுது
3) ஈரப்பதன் கூடும் பொழுது
4) இடத்தின் உயரம் கூடும் பொழுது

14 பின்வருவனவற்றில் நிறமுடைய பதார்த்தம்
1) CaO 2) $PbO_2$ 3) Mgo 4) $KClO_3$

15. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் தாவரமொன்றில் ஆவியீர்ப்பு வீதம் குறைவாக இருக்கும்
1) a-ஈரப்பதன் குறைவான நாள்
2) b-வெப்பநிலை கூடிய நாள்
3) c வெப்பநிலை குறைந்த நாள்
d) காற்றோட்டம் கூடிய நாள்

4) இது இரண்டு இலத்திரன்களை ஏற்றுள்ளது

34. சமதானிகளின் இயல்பில் தவறானது
1) ஒரே அணு எண்ணை கொண்டவை
2) ஒரே அளவு நியூத்திரன்களை கொண்டவை
3) வலுவளவு ஒரேயளவாக காணப்படும்
4) வெவ்வேறு அணுத்திணிவை கொண்டவை

35. பின்வரும் மூலக்கூறுகளில் அதிகளவு அணுக்களைக் கொண்டது
1) அமோனியா 2) எதையில் அற்ககோல்
2) அசற்றிக்கமிலம் 4) காபனீர் ஒக்சைட்டு

— அருள்நேசன்

# பொருளியல் A/L

## பணவீக்கம்
## (INFLATION)

(சென்றவாரத் தொடர்ச்சி)

## IV

## விளைவுகள்

பணவீக்கத்தின் மூலம் சில சாதகமான விளைவுகளும் பல பாதகமான விளைவுகளும் தோன்றுகின்றன.

### சாதகமான விளைவுகள்

**1. உற்பத்தி அதிகரிப்பு**

விலைகள் உயர்வதால் உற்பத்தியாளர் பெறும் இலாபம்/வருமானம் அதிகரிக்கும்! இதனால் உற்பத்தியாளர் ஊக்கத்துடன் உற்பத்தியை அதிகரிப்பர்

எனினும் உழைப்பையும் ஏனைய வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்துகின்ற எல்லை வரையுமே உற்பத்தியினை அதிகரிக்க முடியும்' எனவே பொருளாதார வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களின் போதே அதாவது பயன்படுத்தப்படாத வளங்கள் உள்ள போதே - விலைகளின் அதிகரிப்பால் உண்டாகும் தூண்டுகையானது உற்பத்தியினை அதிகரிக்கச் செய்யும் என்ற வகையில் பொருளியலாளர்கள் இதனை ஆதரிக்கின்றனர்;

**2. முதலீடு அதிகரிப்பு**

உற்பத்தியாளரது வருமான அதிகரிப்பானது சேமிப்பு, முதலீடு என்பவற்றை அதிகரிக்கச் செய்யும்:

வளர்ச்சி குறைந்த நாடுகளில் மூலதனப் பற்றாக்குறை இருக்கின்றது. எனவே அரசு பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வளர்ச்சித் திட்டங்களுக்கு முதலீடு செய்கின்றது இது விலை உயர்வுக்கு வழிவகுத்தாலும், நாட்டில் முதலீடு உருவாகின்றது என்ற வகையில் பொருளியலாளர் இப்பணவீக்கத்தினை ஆதரிக்கின்றனர்.

**3 மூலவளப் பயன்பாடு அதிகரிப்பு**

மூல வளங்களின் பயன்பாடு அதிகரிக்கின்றது. பயன்படுத்தப்படாதிருந்த வளங்கள் பயன்படுத்தப்பட்டு, நிறை தொழில் மட்ட நிலை (Full Employment) அடையப்படும்.

**4. வேலை வாய்ப்பு அதிகரிப்பு**

உற்பத்தி பெருகும் போது, வேலை வாய்ப்புக்களும் அதிகரிக்கும்.

**5. பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி**
**(Economic Growth and Development)**

மேற்கூறப்பட்டவாறு உற்பத்தி, முதலீடு, மூலவளப்பயன்பாடு, வேலைவாய்ப்பு என்பன அதிகரிப்பதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி ஏற்படும்.

**6. கடன்பட்டோரிற்கு நன்மை**

பணவீக்கத்தின் போது பணத்தின் கொள்வனவு ஆற்றல் (பெறுமதி) குறைவடையும். எனவே கொள்வனவு ஆற்றல் (Purchasing Power) குறைந்த பணத்தைக் கொண்டு, கொள்வனவு ஆற்றல் கூட உள்ள போது பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுப்பதன் மூலம் கடன்பட்டோர் நன்மை அடைகின்றனர்.

**7. அரச வருமான அதிகரிப்பு**

நாட்டில் பெறுமானங்களின் அடிப்படையில் வரி விதிக்கப்படும் நிலையில், பணவீக்கம் காரணமாக அரசாங்கம் உயர்ந்தளவான வரி வருமானத்தைத் திரட்டக் கூடியதாக இருக்கும். இலங்கையில் அரச வரி வருமானம் அதிகரிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இவ்வாறான சாதகமான விளைவின் அடிப்படையில் ''பணவீக்கத்தைப் பணவீக்கமே போக்கிவிடும்'' எனக் கருதுவோரும் உள்ளனர். பணவீக்கத்தால் விலைகள் கூடும் பொழுது, வேலை வாய்ப்புக்களும் உற்பத்தியும் கூடும். பொருட்களின் நிரம்பல் கூடுவதால் ஒரு கட்டத்தில் விலை ஏற்றம் தடைப்பட்டுப் பணவீக்கம் மறைந்துவிடுமென்று வாதிடுகின்றனர். ஆனால் பொதுவாக நடைமுறையில் அவ்வாறு அமைவதில்லை.

### பாதகமான விளைவுகள்

**1. வருமான ஏற்றத் தாழ்வு**

(பரீட்சை முக்கியத்துவம் கருதி விரிவாக நோக்கப்படுகிறது)

ஒரு நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் பணவீக்கம் **வருமானப் பரம்பலில்** விரும்பத்தகாத மாற்றத்தை ஏற்படுத்துகிறது பணவீக்கம் உயர்வருமான வர்க்கத்தினருக்கு சாதக நிலையை உருவாக்குவதுடன், தங்கள் வருமானத்தை மேல் நோக்கி உயர்த்த முடியாத வருமானம் குறைந்தவர்களுக்குபாதகமான விளைவை ஏற்படுத்துகிறது. இவர்களைப் பொறுத்தமட்டில் பணவீக்கம் ஒரு ''மேலதிகவரியாகவே'' கணிக்கப்படுகிறது.

இலாபத்தை வருமானமாகப் பெறுகின்ற உற்பத்தியாளர், வியாபாரிகளைப் பொறுத்தவரை பணவீக்க காலத்தில் விலைகள் அதிகரிக்க, இலாபமும் அதிகரித்துச் செல்வதனால் நன்மையடைவர்.


வே. கருணாகரன்
(B. A Hons Dip in Ed)


ஃ அத்தோடு நிலம், கட்டடம், தளபாடம், இயந்திரம், பொறிகள் போன்ற முதற் சொத்துக்களை வைத்திருப்பதனால் அவற்றின் விலைகளும் கூட்டிச் செல்வதாலும் நன்மையடைவர்.

தங்களுடைய சேவைகளுக்கு கட்டணம் அறவிடும் மருத்துவரும் சட்டவறிஞரும் விலைமட்டம் அதிகரிக்கும் போது தங்கள் கட்டணங்களை அதிகளவு அதிகரிக்க முடிவதனால் நன்மையடைய முடியும்.

இவ்வாறு மாறும் (நிலையற்ற) வருமானங்களைப் பொறுத்தவரை பணவீக்கம் அனுகூலமாக அமைகிறது.

ஆனால் சம்பளம், இளைப்பாற்றுச் சம்பளம் வட்டி, வாடகை போன்ற ஒப்பந்த அடிப்படையிலான மாறா (நிலையான) வருமானங்களைப் பொறுத்தவரை பணவீக்கம் பெரிதும் பிரதிகூலமாக அமைகிறது. பணவீக்க காலங்களில் பணவீக்கத்திற்கேற்ப இத்தகையோரின் வருமானங்கள் அதிகரித்துச் செல்வதில்லை. எனவே இவர்களின் மெய்வருமானங்கள் (பணவருமானத்தின் கொள்வனவு ஆற்றல்) வீழ்ச்சியடைகின்றன.

$$\left( \text{மெய் வருமானம்} = \frac{\text{பணவருமானம்}}{\text{விலைச்சுட்டெண்}} \times 100 \right)$$

பணவீக்க காலங்களில் தொழிலாளர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் சம்பள உயர்வினைப் பெறுகின்றனர் இருப்பினும் பணவீக்க வீதத்திற்கு சமனாக சம்பள உயர்ச்சியினை பெரும்பாலும் பெறமுடிவதில்லை. எனவே பணவீக்கத்திலும் பார்க்கக் குறைந்தளவிலேயே சம்பள அதிகரிப்பு காணப்படுவதால் மெய்ச்சம்பளங்கள் வீழ்ச்சியடைகின்றன. ஃ சில சமயங்களில் நாட்கூலி பெறும் உழைப்பாளர் விலை மாற்றத்திற்கு ஏற்ப கூலியைப் பெற முடிந்தால் பணவீக்கத்தாக்கம் ஓரளவு குறையும்.

வட்டி வருமானத்தைப் பொறுத்தவரை ஒப்பந்த வருமானம் என்பதால் பொதுவாக விலைமட்ட உயர்வுக்கு ஏற்ப வட்டிவருமானம் உயர்வதில்லை இதனால் வட்டியினைச் சம்பாதிப்பவர் நட்டமடைவார். ஃ ஆனால் பணவீக்கத்திலும் கூடுதலாக வட்டி அதிகரிக்கும் நிலை ஏற்பட்டால் அவர் நன்மை பெறுவார். ஃ மாறாக பணவீக்க வீதத்திலும் பார்க்க குறைவாக வட்டிவீதம் இருக்குமாயின் முதலில் மெய்ப் பெறுமதிகளில் வீழ்ச்சி ஏற்படும்.

உணவு முத்திரைகளைக் கொண்டுள்ள குடும்பங்களைப் பொறுத்தவரை விலைமட்ட அதிகரிப்புக்கு ஏற்ப உணவு முத்திரையின் பெறுமதியும் அதிகரித்தால் பணவீக்கம் பாதிப்பை ஏற்படுத்தாது ஃ ஆனால் உணவு முத்திரையின் பெறுமதி மாற்றமடையாதிருப்பின் அதனைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்களின் அளவு குறைவடையும். இது அக்குடும்பங்களது வாழ்க்கைத் தரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஃ உணவு முத்திரையின் கீழ் பெறமுடியாத பண்டங்களையும் சந்தையில் உயரும் விலைகளின் படி வாங்குவதாலும், வாழ்க்கைச் செலவு கூடி, வாழ்க்கைத் தரம் குறையும்.

நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயியைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பொருளியல்

பொறுத்தவரை பணவீக்கம் பின்வரும் வகையில் பாதிக்கலாம்:

அ) வெளியீடாகிய நெல்லின் விலை படிப்படியாகச் சென்றால் அவனது பண வருமானம் அதிகரிக்கும்.

ஆ) நெல் உற்பத்தியின் உள்ளீடாகிய விதைநெல், வளமாக்கி, எரிபொருள் போன்றவற்றின் விலை கூடுமானால் உற்பத்திச் செலவு கூடி இலாபம் குறையக்கூடும்.

உள்ளீடுகளின் விலை உயர்விலும் பார்க்க நெல்லின் விலைஉயர்வு கூடுதலாக இருப்பின் அது விவசாயிக்கு சார்பான விளைவுகளை ஏற்படுத்தும்.

இ) விவசாயி தனது சொந்த நுகர்வுக்காகப் பயன்படுத்தும் நுகர்வுப் பொருட்களின் விலை உயர்வதால் மெய்வருமானம் வீழ்ச்சியடையும். இதனால் அவனுடைய வாழ்க்கைத் தரம் குறையலாம்.

ஈ) நெல் உற்பத்தியாளன் வைத்திருக்கும் உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவிகள் களஞ்சிய அறைகள் போன்ற மெய்ச் சொத்துக்களின் பெறுமதி உயர்வதாலும் நன்மையடைய முடியும்

வீடு, காணி போன்ற நிலையான சொத்துக்களை ஈட்டில் வைத்திருப்போர் பணவீக்க காலத்தில் நன்மையடைவர். ஏனெனில் அவர்கள் ஃ கடன்பட்டவர்கள் என்பதாலும், ஃ பெறுமானம் அதிகரித்து வரும் சொத்துக்களை வைத்திருப்பவர்கள் என்பதாலும் ஆகும்.

இவ்வாறாக பணவீக்கம் பல்வேறு மக்கள் குழுக்கள் மீதும் வேறுபட்ட வகைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனினும் இப்பாதிப்புக்கள் வருமான ஏற்றத்தாழ்வை அதிகரிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன. அதாவது பணவீக்கம் செல்வர்களை மேலும் செல்வர்களாகவும், வறியவர்களை மேலும் வறியவர்களாகவும் மாற்றும். இது சமூக நீதிக்கு முரண்பட்டதாகும். இந்நிலை சமூக அதிருப்தியை ஏற்படுத்தி வர்க்க ரீதியிலான போராட்டங்களுக்கும் வழிவகுக்கின்றது

## 2 பாதகமான சென்மதி நிலுவை (Balance of Payment)

பணவீக்க நிலையில் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்திக்கு வேண்டிய உள்ளீடுகளின் விலைகள் கூடுகிறது. தொழிலாளர் கூலி கூடுகிறது. இதனால் உற்பத்திச் செலவு கூடி விலை உயரும். உலக சந்தையில் ஏற்றுமதிப் பொருள் விலை கூடுவதால் ஏற்றுமதிக்கான கேள்வி பெருமளவால் குறையும்போது, ஏற்றுமதி வருமானமும் குறையும்.

உள் நாட்டில் பொருட்களின் விலை மட்டம் உயர்வதனால் ஏற்றுதியாளர்கள் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக உள்நாட்டில் விற்பனை செய்வதனாலும் ஏற்றுமதித் தொகை குறைந்து ஏற்றுமதி வருமானம் குறைவதும் உண்டு

அதே நேரத்தில் உள் நாட்டில் ஏற்பட்ட பொது விலைமட்ட அதிகரிப்புக் காரணமாக உள்நாட்டுப் பொருட்களிலும் பார்க்க இறக்குமதிப் பொருட்கள் ஒப்பீட்டு ரீதியில் மலிவாகத் தோன்றும் இதனால் இறக்குமதிப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்து, இறக்குமதித் தொகை அதிகரிக்க இறக்குமதிச் செலவு அதிகரிக்கும்.

பணவீக்கத்தில் உள்நாட்டுப் பணப்பெறுமதி குறையும் போது மக்களின் செலவு நாட்டமும் உயரும். இதனாலும் இறக்குமதி கேள்வி கூடி இறக்குமதிச் செலவு அதிகரிக்கும்.

இவ்வாறு ஏற்றுமதி வருமானம் குறைந்து, இறக்குமதிச் செலவு கூடுவதனால் வர்த்தக நிலுவை (Balance of Trade) பாதகமாகும் இது சென்மதி நிலுவையிலும் பாதகமான நிலையைத் தோற்றுவிக்கும்.

இதே போன்று சென்மதிநிலுவையின் சேவைகள் கணக்கிலும் பணவீக்கம் பாதிப்பை ஏற்படுத்தும். உதாரணமாக பணவீக்க காலத்தில் உல்லாசப் பிரயாணிகள் வருகை குறையும். இது சேவைகள் மூலமான வருவாயைக் குறைக்கும். அதே நேரத்தில் பணவீக்க காலத்தில் அதிகளவு உள்நாட்டவர் வெளிநாடுகளுக்கு பிரயாணங்களை மேற்கொள்வதனால் சேவைகள் கொடுப்பனவு அதிகரிக்கும். இவ்வாறு சேவைகள் கணக்கில் பற்றாக்குறை ஏற்படுவது சென்மதி நிலுவையில் பாதக நிலைமையை உருவாக்கும்.

பணவீக்க காலத்தில் பணத்தின் மெய் பெறுமதி வீழ்ச்சி காரணமாக முதலீடு உட்பாய்ச்சல் குறைந்து, வெளிப்பாய்ச்சல் அதிகரிப்பதனால் மூலதனக் கணக்கில் ஏற்படும் பற்றாக்குறையும் சென்மதி நிலுவையில் பாதக நிலையை உருவாக்கும்.

இது ஃ வெளிநாட்டுச் சொத்து வீழ்ச்சி, ஃ கடன் சுமை அதிகரிப்பு என்பவற்றுக்கு வழிவகுக்கும்:

## 3 நாணயத்தின் உட்பெறுமதியும் நாணயமாற்று வீதமும் வீழ்ச்சி (Foreign Exchange Rate)

பணப் பெறுமதி என்பது ''நாணயத்தின் இரு பக்கங்கள்'' என்ற வகையில் இரண்டு வகையாக நோக்கப்படுகிறது:

(அ) நாணயத்தின் உட்பெறுமதி

(ஆ) நாணயத்தின் வெளிப்பெறுமதி (நா, மா. வீதம்)

(அ) ''ஒரு குறிப்பிட்ட நாணயத்தைப் பயன்படுத்தி உள்நாட்டில் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் பெறுமதியே நாணயத்தின் உட்பெறுமதியாகும்''. இது பொதுவிலை மட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவிலை மட்டம் ஓர் விலைச் சுட்டெண்ணால் அளவிடப்படுகிறது. எனவே நாணயத்தின் உட்பெறுமதி விலைச்சுட்டெண் மூலம் பின்வருமாறு அளவிடப்படும்.

$$\text{நாணயத்தின் உட்பெறுமதிச் சுட்டெண்} = \frac{\text{அடிப்படை ஆண்டின் விலைச் சுட்டெண்} \times 100}{\text{நடைமுறை ஆண்டின் விலைச் சுட்டெண்}}$$

உதாரணம்:

1990 ஆம் ஆண்டின் விலைச் சுட்டெண் (1980 = 100) 125

ஃ 1990 ஆம் ஆண்டில் நாணயத்தின் உட்பெறுமதிச் சுட்டெண் $= \frac{100 \times 100}{125} = 80$

எனவே பணவீக்க காலத்தில் நாணயத்தின் உட்பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்லும்.

(ஆ) ''ஒரு குறிப்பிட்ட நாணயத்தைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யக்கூடிய வெளிநாட்டு நாணயங்களின் அளவே நாணயத்தின் வெளிப் பெறுமதியாகும்'' இதனையே ''நாணய மாற்று வீதம்'' என அழைப்பர். 'ஒரு நாட்டு நாணயத்தின் விலையே நாணயமாற்று வீதமாகும்''.

உதாரணம்: 1ஐ. அ டொலர் = 49 ரூபா

நாணயத்தின் உட்பெறுமதியில் உண்டாகும் மாற்றங்கள் நாணயத்தின் வெளிப் பெறுமதியிலும் அதே வகையிலான மாற்றத்தை ஏற்படுத்தும்.

நாணயத்தின் உட்பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படும் போது (விலை மட்டங்கள் அதிகரிக்கும்போது) சென்மதி நிலுவை பற்றாக்குறை தோன்றும் (முன்னர் விளக்கப்பட்டுள்ளது) ........ இவ்வகையில் வெளிநாட்டு வருமானங்கள் குறையும் போது குறிப்பிட்ட நாட்டில் வெளிநாட்டு நாணயங்களின் நிரம்பல் குறையும் அதேநேரம் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் அதிகரிப்பதனால் வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வி அதிகரிக்கும். இந்நிலையில் நாணய மாற்று வீதம்தளம்பவிடப்பட்டிருக்குமாயின் (Fiuctuating)வெளிநாட்டு நாணயத்திற்கு கொடுக்க வேண்டிய விலை அதிகரிக்கும் இது மறுபுறமாக குறிப்பிட்ட நாட்டு நாணய மாற்றுவீதம் வீழ்ச்சியடைவதனைக் குறிக்கும்

(இதற்கு மறுபுறமாகவும் மாணவர் விளக்கம் பெறவேண்டும்)

குறிப்பு: நாணய மாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றமும் நாணயத்தின் உட்பெறுமதியில் அதே வகையிலான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனை மாணவர்கள் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். (இறக்குமதியாகும் மூலப்பொருள், முடிவுப் பொருள் விலை உயர்வதனாலும், ஏற்றுமதி அதிகரிப்பதனாலும் இது நிகழும்)

## 4 முதலாக்கம் குறைதல்

பணவீக்க நிலையில் வாழ்க்கைச் செலவு கூடுவதால் சேமிப்பு குறைகிறது. ஃ அதேபோல் பணவீக்கத்தில் பணப்பெறுமானம் குறைவதனாலும் சேமிப்பு நாட்டம் குறைகிறது இவ்வாறு மொத்தச் சேமிப்பு குறைய முதலாக்கம் குறையும்.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பதனாலும், சேமிப்பின் மெய்ப்பெறுமதி குறைவதனாலும் கடந்த காலச் சேமிப்பை நிகழ்கால நுகர்வுக்குப் பயன்படுத்துவர். இதனாலும் சேமிப்புக் குறைந்து முதலாக்கம் குறைகிறது.

## 5 வாழ்க்கைத்தரம் குறைதல்

பணவீக்கத்தில் விலை உயர்வுக்கேற்ப ஏழைகளின் பணவருமானம் உயர்வதில்லை இதனால் வாழ்க்கைச் செலவுகூடி வாழ்க்கைத்தரம் குறையும் வறுமை நிலை அதிகரிக்கும்.

## 6 கடன் கொடுத்தோர் பாதிப்பு

பணவீக்க காலத்தில் பணத்தின் கொள்வனவு ஆற்றல் குறைவடைகிறது எனவே கூடிய கொள்வனவு ஆற்றலுடைய பணத்தைக் கடனாகக் கொடுத்து, குறைந்த கொள்வனவு ஆற்றலுடைய பணத்தைத் திரும்பப் பெறுவதனால் கடன் கொடுத்தோர் பாதிக்கப்படுகின்றனர்.

## 7 பணச்சந்தை பாதிப்பு

குறுங்காலக் கடன் வழங்கும் பணச்சந்தையானது பணவீக்கத்தில் பாதிக்கப்படும். கடன் கொடுப்பதால் கடன் கொடுப்பவன் நட்டமடைகின்றான் ஏனெனில் கடனை மீளப்பெறு போது அதன் கொள்வனவு ஆற்றல் குறைந்து போகின்றது. இதனால் கடன்கள் வீழ்ச்சியடையும். பணச்சந்தை பாதிக்கப்படும்.

## 8 அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்பு

நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடும்போது அவற்றிற்கு மதிப்பிடப்பட்ட செலவினங்களைக் காட்டிலும், ஏற்படும் செலவினங்கள் அதிகரிக்க, நிதிப்பற்றாக்குறை காரணமாக திட்டங்கள் கைவிடப்படும் கட்டட ஒப்பந்தத்தை ஏற்றவர் அதை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும்; இவ்வாறு திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட அபிவிருத்தி பாதிக்கப்படும்.

## 9 பதுக்கல் நடவடிக்கை

பணவீக்கத்தினால் நிகழ்கால விற்பனையைக் காட்டிலும் எதிர்கால விற்பனை கூடிய இலாபம் தருவதால், விற்பனையாளர் பொருட்களைப் பதுக்க செயற்கைத் தட்டுப்பாடு உருவாகும். இது மேலும் விலை உயர வழிவகுக்கும்.

## 10 தவறான சாதன ஒதுக்கீடு

ஒரு குறிக்கப்பட்ட துறையினைக் குறித்து (ஆடம்பரப் பொருள்) பணவீக்கப் போக்கு காணப்படுமானால் அத்துறையில் இலாபம் உயர்வாக அமைய, நாட்டிலுள்ள ஆக்கச் சாதனங்கள் பலவும் அக் குறிககப்பட்ட துறையை நோக்கி நகர்த்தப்படுகின்றன இதன் காரணமாக வேறு சில துறைகளின் (அத்தியாவசியப் பொருள்) உற்பத்தி பாதிக்கப்படலாம். பணவீக்கம் இவ்வாறான தவறான சாதன ஒதுக்கீட்டினையும் ஏற்படுத்தும்.

## 11 பொருளாதார சீர்குலைவு

பணவீக்கம் வாழ்க்கைச் செலவில் அதிகரிப்பை ஏற்படுத்துவதால் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்குவர் வேலை நிறுத்தங்கள் இடம் பெறலாம் ''கூலிவிலைச் சுழலேறி'' அடிப்படையில் பணவீக்கம் தொடர்ந்து நிலவவும் முடியும் இவ்வகையில் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பன சீர்குலையும்

குறிப்பு: ஒருநாட்டு நாணயத்தின் உட்பெறுமதியில் உண்டாகும் வீழ்ச்சி (அல்லது விலைச் சுட்டெண்ணில் ஏற்படும் அதிகரிப்பு) பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றிய வினாவிற்கு விடையளிக்கும் போது மேற்குறிப்பிட்ட விளைவுகளையே குறிப்பிடல் வேண்டும்.

(தொடரும்)

# பங்கீட்டு மண்ணெண்ணெய் பாடசாலைக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு விநியோகிப்பதற்காக செயலகத்தால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெயை சில பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு சில பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளன

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் பத்து பீப்பாவும், புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் ...கள் கூறுகின்றனர்.

நிலைமை இப்படி இருக்கும் போது எப்படி மேற்படி அளவு மண்ணெண்ணெயை இச் சங்கங்களால் பாடசாலைகளுக்கு வழங்க முடிந்தது? வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு செயலகத்தால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெயில் மேலதிகமாக 10 பெரல் மண்ணெண்ணெய் எஞ்சியுள்ளது,

# தாதிகள் பயிற்சி கல்லூரி; குறைந்த மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு இவ்வாண்டு பதினைந்து பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பில்இருந்து கிடைத்த தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது.

இருநூறுக்கு மேற்பட்ட தாதிகளுக்கு பயிற்சி அளிக்கக் கூடிய இக் கல்லூரிக்கு தொடர்ந்து மிகக் குறைந்த பயிற்சி மாணவர்கள் தெரிவு ... பிடத்தக்கதாகும்:

வழமையாக விண்ணப்பங்கள் தாமதமாகி வருவதினால் போதியளவு மாணவரை தெரிவுசெய்ய முடியாது இருப்பதாக கூறப்பட்டு வந்தது ஆனால் இம்முறை இவ் விண்ணப்பங்களை யாழ். அரசாங்க அதிபர் தானேகொண்டு சென்று கையளித்த போதும் குறைந்தளவு மாணவரே தெரிவு செய்யப்பட்டுள்ளமை


# இரட்டைச் சூட்டடுப்புப் பாவனையாளர்களின் கவனத்திற்கு

இவ் அடுப்பில் உச்சப்பயன் பெற: நீண்ட பாவனைக்கு

- ஒரே நேரத்தில் இரு அடுப்புத்தொகுதிகளையும் பயன்படுத்துங்கள்.
- தினமும் அடுப்பை எரிக்குமுன் சாம்பலை அகற்றுங்கள்.
- விறகுகளை சிறிய மெல்லிய துண்டுகளாகப் பிளந்து பாவியுங்கள்

பாவும், புங்குடுதீவு - நயினா தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் ஏழுபீப்பாவும் இடம்பெயர்ந்த தீவகக் கோட்டத்தைச் சேர்ந்த சில பாடசாலைகளுக்கு வழங்கப் பட்டுள்ளன.

மேற்படி பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதற்கென யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவினால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய்யில் ஒரு பகுதியே இவ்வாறு பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினது பாவனையாளர்களுக்குத் தேவையான அளவிலேயே செயலகத்தினால் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. மேற்படி தேவை குறித்து சங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு அமையவே இது வழங்கப்பட்டதாக செயலக அதிகாரி மாக 10 பெரல் மண்ணெண்ணெய் எஞ்சியுள்ளது,

பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெயிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ஒரு பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லையா? அல்லது பாவனையாளர்களுக்கு என்று கூறப்பட்டு செயலகத்திடமிருந்து மேலதிகமாகப் பெறப்பட்டிருக்கிறதா? இவ்வாறான செயற்பாடுகளில் எது நடந்தது என்பது குறித்து தெரிந்துகொள்ளமுடியவில்லை(நி)

## சிரமதானம்

தந்தை செல்வாவின் நினைவாலயத்திற்கு முன்பாகவுள்ள சூழல் இன்று சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது. நாளை தந்தை செல்வாவின் 17வது சிரார்த்ததினத்தைமுன்னிட்டு மலரஞ்சலி செலுத்துவதற்கு ஏதுவாக இப்பகுதி துப்புரவு செய்யப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது

தொடர்ந்து மிகக் குறைந்த பயிற்சி மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வருவது குறிப் குறைந்தளவு மாணவரே தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (நி)

## கோப்பாய் உவர் நிலத்தில் தானியச் செய்கை வெற்றி

கோப்பாய் வெளியிலுள்ள உவர்த்தரையை மீட்டு பயன்படுத்த தமிழ் ஈழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கடந்த காலபோகத்தில் பரீட்சார்த்தமாக செய்யப்பட்ட நெற்செய்கை வெற்றியளித்து இதே நிலத்தில் நெல் அறுவடை செய்த உடன் பரீட்சார்த்தமாக பயறு, சணல் கம்பு, இறுங்கு ஆகிய சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு செழிப்பாக வளர்ந்துள்ளன.

கடந்த 20 வருடமாக பயிரிடப்படாமல் தரிசாக விடப்பட்டிருந்த நிலத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் விவசாயிகளுடனும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து கடந்த காலபோகத்தில் நான்கு வகையான நெல் இனங்களை பரீட்சார்த்தமாக பயிரிட்டு வெற்றி கண்டதுடன் சிறுதானிய செய்கையும் வெற்றியளித்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் 800 ஏக்கர் வரையான உவர் நிலம் உள்ளது இந்த நிலத்தை அடுத்து வரும் போகங்களில் பயிர்ச் செய்கைக்கு கொண்டு வரவும் இதே போன்று ஏனைய இடங்களில் தரிசாக உள்ள நிலங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வரவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


- விறகுகளை சிறிய மெல்லிய துண்டுகளாகப் பிளந்து பாவியுங்கள்
- ஈரமான விறகுகளையும், அளவிற்கதிகமான விறகுகளையும் பயன்படுத்துவதைத் தவிருங்கள்.
- பிரதான அடுப்பில் சுவாலை வெளியேறாதவாறும், துணை அடுப்பில் சுவாலை வெளியேறக்கூடியவாறும் பாத்திரங்களை வைத்துப் பயன்படுத்துங்கள்.
- வாரத்துக்கு ஒருமுறையாவது அடுப்பை மெழுகுங்கள்.

இவ் அடுப்புப் பாவனையின்போது நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தீர்விற்கு உடன் கடித மூலமோ நேரிலோ தொடர்பு கொள்ளுங்கள

"சக்திப்பகுதி"
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப் புலிகள
காங்கேசன்துறை வீதி,
தாவடிச்சந்தி,
தாவடி,
தமிழீழம்.

(சி-9254)



நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்! நியாய விலை!

- சகல கைக்கடிகார வகைகள்
- எலெக்றோனிக் மின்சாரப்பொருட்கள்
- மணிக்கூட்டு பற்றரிகள்

இவற்றின் விற்பனை முன்னோடி

- கைக்கடிகார வகைகள்
- எலெக்றோனிக் பொருட்கள்

திருத்துவதில் ஓர் சிறப்புத் தேர்ச்சி

# மின்வளம்

இல 81, லெப். கேணல் சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

உள்ளங்களை மகிழ்வூட்டும்

- விடுதலைப் பாடல்களையும்
- சினிமா திரைப்படப் பாடல்களையும் சிறந்த முறையில

COMPACT DISC ல்

பதிவு செய்து உடனுக்குடன் பெற்றிடுங்கள

மணிக்கூட்டு பற்றரிகள் கழிவு விலையில் வியாபாரிகளுக்கு வழங்கப்படும்.

(சி-9229

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

மழை பொழிந்து காற்று வீசுகிறது என்பதற்காக நிலையற்ற மணல் மீது கட்டடம் எழுப்ப நாம் துணியக் கூடாது-

- ஹென்றி வரர்ட் பீச்சர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25 04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2028
தபால் பெட்டி எண் - 05

## அரசியற் தீர்வு எந்தளவில்?

தென் மாகாணசபைத் தேர்தலின் பின் 'இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு' என்ற பதம் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் அங்கிருந்து வெளியாகும் பத்திரிகைகளிலும், ஓரளவு அவை இடம் பிடித்துக் கொண்டுள்ளன. இந்நிலையில் தென்னிலங்கையில் இனப்பிரச்சினையை சமாதான ரீதியில் தீர்ப்பதற்கான ஓர் அரசியற் சூழ்நிலை உருவாகி வருகின்றதா என்ற கேள்வி எழும்புவது நியாயமே.

தென் மாகாணத்தில் கடந்த மாதத்தின் பிற்பகுதியில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே.கவிற்கு கிடைத்த தோல்வியானது டி.பி. விஜேதுங்காவின் 'இராணுவத் தீர்வு' என்ற கொள்கைக்குக் கிடைத்த தோல்வி என்றேஎதிர்த்தரப்பினால் விமர்சிக்கப்படுகின்றது. இதில் எந்தளவிற்கு உண்மை உண்டோ இல்லையோ டி. பி. விஜேதுங்காவை மக்கள் நிராகரித்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

இதற்கு ஏற்றால் போல் பிரதான எதிரணிக் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தாம் ஆட்சியைக் கைப்பற்றினால் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என வெளிப்படையாகவே அறிவித்துள்ளார்.

இதேசமயம் ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான தொகையினரும் கடந்த கால தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்தவாறு தமிழர் பிரச்சினையை தீர்த்துவைக்குமாறு தலைமைப்பீடத்தை வற்புறுத்தத் தொடங்கியுள்ளதாகவும் அப்பொழுதே அடுத்த தேர்தலில் வெற்றி பெற முடியும் என சுட்டிக்காட்டியும் உள்ளதாக அறியமுடிகிறது. அமைச்சர்கள் சிலர்கூட யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது என பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர்.

இதுதவிர சர்வமத குழுவொன்று யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அத்தோடு 100 பேர் கொண்ட பௌத்த பிக்குகள் குழுவொன்றும் அணி அணியாக யாழ்ப்பாணம் வந்து செல்ல திட்டமிட்டு முயற்சிகளில் இறங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அரசியல்வாதியைப் போல ஆளுநர் செயற்படுகின்றார்

### வை. கோபாலசாமி விபரிப்பு

தமிழகத்தின் ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி ஓர் அரசியல் வாதியைப் போல செயற்படுகின்றார். இவ்வாறு வை. கோபாலசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

பொள்ளாச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு செத்துவிட்டது. எல்லோரும் இந்தி மொழி படிக்க வேண்டும் என்று முதலில் தெரிவித்தவர் சென்னாரெட்டி. அப்போதே நான் அதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டேன். தமிழ் நாட்டில் ஆளுநர் சென்னாரெட்டி தனது பேட்டி மற்றும் நடவடிக்கைகள் மூலம் ஓர் அரசியல்வாதியாகவே தன்னைக் காட்டிக் கொள்கிறார் எனவும் தெரிவித்தார்.

ஆளுநரிடம் தமிழக அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொடுத்துள்ள புகார் மனு பற்றிய கேள்விக்கு பதிலளித்த வை. கோபாலசாமி அரசியல் சட்டத்தின் 356 வது பிரிவை எந்தச் சூழ்நிலையிலும் எந்த மாநிலத்தின் மீதும் பிரயோகிக்கப்படக் கூடாது என்பதே எமது கருத்தாகும் அ.இ.அ.தி.மு.க மக்களுக்கு விரோதமாக செயற்படுகிறது எனினும்மக்கள்தேர்ந்துஎடுத்த அரசை மக்களே தூக்கி எறிய வேண்டும்' அத்தகைய கருத்து வெளிப்பாட்டிற்கு வாய்ப்புதான் இடைத்தேர்தல். இந்த அடிப்படையில்தான் பிரச்சினையை அணுகுவோம் எனவும் குறிப்பிட்டார்.

# தமிழக அரசு மோதல் போக்கை கைவிட்டுவிட வேண்டும்

### சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர்

(சென்னை)

எம். ஜி. ஆரின் வழியில் வந்ததாக கூறிக்கொள்ளும் இந்த அரசு மத்திய அரசாங்கத்துடன் மோதுகின்ற போக்கைக் கைவிட வேண்டும் என்றும் மத்திய அரசுடன் நல்லுறவை வளர்க்க வேண்டும் என்றும் தமிழக சட்டப்பேரவை உறுப்பினரும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவருமான டேனியல்ராஜ் கேட்டுக்கொண்டார்

தமிழக அரசின் பட்ஜெட் மீதான விவாதத்தில் கலந்து கொண்டுபேசிய அவர் மேலும் கூறுகையில் தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, லாக்அப், சாவு போன்றவை அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன தமிழகக் காவல் துறையினர் எதில் சாதனை படைக்கிறார்களோ இல்லையோ மாமூல் வாங்குவதில் மட்டும் சாதனை படைத்துள்ளனர் என்றும் தெரிவித்தார் காங்கிரஸ் கட்சியின் மற்றுமொரு உறுப்பினரான ஞானசேகரன் பேசுகையில் தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தை காலிப் பெருங்காயடப்பா என்று வர்ணித்தார்.

தமிழக அமைச்சர் கண்ணப்பன் குறுக்கிட்டு இவர்களுக்கு பதிலளிக்கையில் மத்திய அரசை எதிர்க்க வேண்டும் என்பது எங்கள் எண்ணம் இல்லை. ஆனால் மத்திய அரசின் எல்லாத்திட்டங்களுக்கும் ஆமாம்போட முடியாது எனக் குறிப்பிட்டார்.

# இந்திய பாக். உறவுகளில் மற்றுமொரு பின்னடைவு

### பயணிகளுக்கு பாக். கட்டுப்பாடு விதிப்பு

(டில்லி)

பாகிஸ்தான் அரசு விதித்திருக்கும் பயணக் கட்டுபாடு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளில் மற்றுமொரு பின்னடைவாகும் என்று இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஆர்.எல். பாட்டியா கூறியுள்ளார்

பாகிஸ்தானிலிருந்து இந்தியா வருவதற்கும், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் செல்வதற்கும் பாகிஸ்தான் அரசு கட்டுப்பாடுகளை அறிவித்திருப்பது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்'

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தியாவிற்கு எதிரான பிரசாரம் மேற் கொள்வது என்பதை மட்டுமே பாகிஸ்தான் தனது வெளியுறவுக் கொள்கையாக வரித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இருதரப்பு உறவுகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதிலும் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்பதிலும் இந்தியா உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பாடசாலைகளை விடவும்

# ரியூசன் வகுப்புகளிலேயோ

# இந்திய தலைவர்களை கொல்ல உத்தரவாம்

(டில்லி)

இந்தியாவின் அரசியல் தலைவர்களை படுகொலை செய்யும்படி ஜம்முகாஷ்மீரில் உள்ள சில கிளர்ச்சிக்குழுக்களுக்கு பாகிஸ்தானிய ஏஜென்சிகள் உத்தரவிட்டுள்ளதாக உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

வானொலி தகவல்களை இடைமறித்துக்கேட்டபோதே தமக்கு இது பற்றி தெரியவந்ததாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஜம்முகாஷ்மீர் தேசியசபை, பிரதேச காங்கிரஸ் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களையே கிளர்ச்சியாளர்கள் இலக்கு வைத்துள்ளனர் இதைவிட ஜனதாதள், சி.பி ஐ (எம்) ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களின் பெயர்களும் இப்பட்டியலில் உள்ளது.

# இந்தியமாநிலமாக சிக்கிமை சீனா அங்கீகரிக்கும்

### - சீனத் தூதுவர்

(கல்கத்தா)

இமாலயப் பிராந்தியத்திலுள்ள சிக்கிம் மாநிலத்தை இந்தியாவுடன் ஒருங்கிணைந்த பகுதியாக ஏற்றுக் கொள்ள சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலுள்ள சீனத் தூதுவர் கடந்த புதன்கிழமை கல்கத்தாவில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்த விரும்பும் சீனா அண்டை நாடான இந்தியாவுடனான எல்லைச் சச்சரவு ஒன்றைத் தீர்ப்பதற்கான ஒரு பிரதான நடவடிக்கையாகஇது கருதப்படுகிறது:

சிக்கிம் மாநிலம் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக தனியான பிரிட்டிஷ் காப்பாட்சிப் பிரதேசமாக இருந்ததும், 1950ன் பின்னர் இந்தியாவின் காப்பாட்சிப் பிரதேசமாக இருந்தும், 1975ல் அதன் சட்ட சபை குடியரசுக்கு முடிவுகட்டி இந்தியாவின் இணைந்த மாநிலமாக அறிவித்தது தெரிந்ததே

# சேர்பிய படைகள் விலகல் ஐ. நா. அதிகாரிகள் திருப்தி

(சரஜேயேவோ)

பொஸ்னிய சேர்பிய படைகள் நேட்டோ நாடுகள் விதித்த காலக்கெடு முடிவடைவதற்கு முன்பாக முஸ்லிம்கள் பெரும் பான்மையாக வாழும் கொறஸ்டோ நகரப்பகுதியிலிருந்து வாபஸ் பெறப்படத் தொடங்கியுள்ளன.

திருப்தியான முறையில் சேர்பிய படைகள் வாபஸ் பெறப்படுவதாக ஐ. நாவின் அதிகாரிகள் நேட்டோ நாடுகளின் விமானத்தாக்குதலுக்கு அனுமதியளிக்க மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

# விவசாயிகள் உடைமை தொடர்ந்து பாதுகாப்பு

புதிய தென்னாபிரிக்காவில் வெள்ளை இன விவசாயிகளின் சொத்துக்கள் பாதுகாக்கப்படும் என்று ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா உறுதியளித்துள்ளார்

சிறுபான்மை வெள்ளையின விவசாயிகள்குழுவொன்றிடம் ஆபிரிக்கன்ஸ் மொழியில் உரையாடிய நெல்சன் மண்டேலாமேலும்கூறுகையில் விவசாயிகளுடன் ஒன்றுபட்டு வேலை செய்ய முடியும் எனக் கருதுகிறோம் ஒரே விவசாயி ஒரே பண்ணை என்ற சுலோகத்தை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கொண்டிருக்கவில்லை ஒவ்வொருவிவசாயியின் நிலைமையையும் நாங்கள் கௌரவிப்போம் எனவும் தெரிவித்தார்

தென்னாபிரிக்காவின் மக்கள் தொகையில் 15 சதவீதத்தைக் கொண்டுள்ளவெள்ளை இனத்தவர்களில் சுமார் 60, 000 பேர் 87 சதவிகித விவசாயக்காணிகளுக்கு சொந்தக்காரர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது

# பி.பி.ஸி: தெற்காசிய பிரிவு புதிய தலைவர் நியமனம்

(லண்டன்)

பி பி ஸியினர்தெற்காசியப் பிரிவின் புதிய பிராந்தியதலை

போதையும் விட செய்திஊடகத்துறையில் மிக அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன

அணியாக யாழ்ப்பாணம் வந்து செல்ல திட்டமிட்டு முயற்சிகளில் இறங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவற்றோடு தென்னிலங்கையில்உள்ள துறைசார் வல்லுநர்கள் பலரும் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் இது குறித்து ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுடன் பேச்சுக்கள்நடத்தியுள்ளனர். இந்நிலையில் இவ் அமைப்புக்களின் இம்முயற்சிகள் எந்தளவு முன்னேற்றம்கண்டுள்ளன என்பதைவிட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன|படுகின்றன என்பவையே முக்கியமாகும்.

ஆனால் அரசியல் வட்டாரங்களில் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு என்பது பற்றி குறிப்பிடத்தக்க அளவில் பேசப்பட்டாலும் இதில் நம்பிக்கை கொள்ளக் கூடிய விதத்தில் ஏதாகிலும் உண்டா என்றால் இல்லை என்றே கூறமுடியும்.

ஏனெனில்யுத்தத்தைத்தீர்மானிப்பதற்கும்,நடத்துவதற்கும்பொறுப்பாகவுள்ள ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற நிலையில் இருந்து மாறவில்லை. தென்மாகாணசபைத் தேர்தலின் பின்னரும்அவர் கொள்கையில் மாற்றம் எதுவும்இல்லை 'வடக்கு- கிழக்கில் உள்ளது பயங்கரவாதமே' என்ற நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள அவர்விரும்பவில்லை.

அத்தோடு சமாதானத்திற்கான வழிகளை எல்லாம் மூடிவிட்டு யுத்தத்திற்கரன தயாரிப்பிலேயே அவர் தீவிர கவனம் செலுத்துகின்றர். பெரும் பொருட் செலவில் கொள்வனவு செய்யப்படும் ஆயுதங்களுடன் மீள் பயிற்சி வழங்கப்பட்ட இராணுவம் யுத்தத்திற்குத் தயாராகி வருகின்றது. சிறிலங்கா இராணுவம் கூறிக் கொள்ளும் இறுதி யுத்தத்திற்கென படைகள் வடக்கே அனுப்பப்பட்டு வருவதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தனது கொள்கைகள் திட்டங்களை எதிர்ப்பவர்கள் கடும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா எச்சரித்தமை முக்கியமாகும். அதாவது தனது நோக்கங்கள், திட்டங்கள் என்பனவற்றை நிறைவேற்ற அவர் முழு அளவில் பயன்படுத்த தயாராக உள்ளதையே இது காட்டுகின்றது

இந்நிலையில் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு என்பது அரசியல் வட்டாரங்களில் பேசப்படுவதினால் மட்டும் கிட்டிவிடாது அதிகாரத்தில் உள்ளவர்களின் மனமாறுதலில் அல்லது தோல்வியிலேயே அது இடம் பெற முடியும். ஆனால் அண்மைய சம்பவங்கள் டி.பியின் மனமாறுதலில் எதுவும் நிகழ்ந்துவிடப் போவதில்லை என்பதையும் அவரின் தோல்வியிலேயே அது முடிவடையும் என்பதையுமே உணர்த்துகின்றது.

# ரியூசன் வகுப்புகளிலேயே ஆசிரியர்களுக்கு அக்கறை

## வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்

(திருக்கோணமலை)

பாடசாலைகளில் மந்த நிலையில் கற்பிக்கும் அசிரியர் சிலர் ரியூசன் வகுப்புகளில் திறமையாக போதிப்பதை அவதானிக்க முடிகின்றது. இத்தகையோர் சமுதாயத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர். இத்தகையோரை தண்டனைக்கு உட்படுத்துவதுகூட பாவமான செயலாகக் கருதப்படமாட்டாது. இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் க. தியாகராசா தெரிவித்தார்.

திருக்கோணமலைமாவட்ட சர்வோதயம் நிலையத்தால் இப்பகுதி மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான இலவச பாடநெறி வழங்கல் ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; வடகிழக்கு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் இம் மாகாண மக்களின் கல்வித்தரம் பேணப்படுவது தொடர்பாக நாம் பெரிதும் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருக்கிறோம். இம் மாகாண மக்கள் கல்வித்துறையில் எந்த நிலையிலும் பின்னடைவு பெறக்கூடாது என்ற நிலையிலேயே கல்வித்திணைக்களம் செயற்பட்டு வருகிறது. இந்த நிலையில் இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் இதனை ஒரு தொழிலாகக் கருதாமல் சமூகப்பணியாக நினைத்து செயற்பட வேண்டும் அலுவலகம் ஒன்றில் ஊழியர் தவறு செய்தால் உடன் தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால் தம்மை நம்பிக் கல்விப் போதனை பெறவரும் மாணவர்களுக்கு ஆசிரியர் தவறு இழைத்தால் எந்தத்தண்டனையும் வழங்கபடுவது இல்லை என்றும் தெரிவித்தார்.

# பனிச்சங்கேணிப் பகுதி தொடர்ந்தும் சிறிலங்காப் படையால் சுற்றிவளைப்பு

பனிச்சங்கேணி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய சிறிலங்கா இராணுவத்தினர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறோம் என தெரிவித்த இராணுவ பேச்சாளர் எந்த இராணுவத்தினரை கைது செய்துள்ளார் என்பதை வெளியிட மறுத்துள்ளார்.

பனிச்சங் கேணி கிராமத்தில் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றைத் தொடர்ந்து ஆத்திரம் அடைந்த இராணுவத்தினரே அப் பகுதி பொது மக்கள்மீது இத் தாக்குதலை மேற் கொண்டதாகவும் இதில் சில இராணுவத்தினர் உடனடி அதிர்ச்சியில் சித்தசுயாதீனம் இழந்து இத் தாக்குதலை மேற் கொண்தாக தெரிய வருகிறது.

இதே வேளை பனிச்சங்கேணிமுருகன்கோவிலடியைச் சேர்ந்த வீரன் வைரமுத்து (50வயது) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை வீட்டில் எரியுண்டு மரணம் அடைந்துள்ளதாகவும் ஐம்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் அங்கு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதே வேளை இக் கிராமத்தில் அறுபது வீடுகள் மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதி மக்கள் பாதுகாப்பு கருதி காடுகளில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் இவர்கள் அனைவரும் மீனவகுடும்பத்தை சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இவர்கள் மீளக் குடியேற்றப்பட்டவர்கள் ஆகும். படையினர் தாக்குதலில் ஐவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளதாகவும் வேறுபலர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகியும் அடிகாயங்ளுக்கு இலக்காகியும் உள்ளனர்.

வே இளையதம்பி (வயது 84) க சின்னத்தம்பி (வயது 75), சி. தர்மபதி (வயது 37) எஸ். சின்னப்பிள்ளைவயது38) வீ. திலகேஸ் (வயது 18) வீ. மேகந்தி (வயது 8) இராசையா (வயது 47) ஆகியோர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை இராணுவத்தினரால் தொடர்ந்து அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல் தெரிவிக்கின்றது.

# புதிய தலைவர் நியமனம்

(லண்டன்)

பி பி ஸியினர்தெற்காசியப் பிரிவின் புதிய பிராந்தியதலைவராக பாரிலங்கறிட்ஜ்(48) நியமிக்கப்பட்டுள்ளார். பி.பி ஸி உலகசேவையின் இந்தியா நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்கான வானொலி ஒலிபரப்புகளுக்கு பொறுப்பேற்கிறார்.

தெற்காசியாவில் முன்னெப்போதையும் விட செய்திஊடகத்துறையில் மிக அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன என அவர் கருத்துவெளியிட்டார். இவர் இதுவரை பி பி ஸிதொலைக்காட்சியிற் செய்திவிமர்சனத் தயாரிப்பாளராகவும் பி.பி.ஸிஉலகசேவையில் ஆங்கிலத்தில் செய்தி விமர்சனங்களைத் தயாரிப்பவராகவும் பணியாற்றியிருந்தார்.

## இடம்பெயர்ந்தோர் முகாம்களில்

# சுகாதார வசதி ஏற்படுத்த அரசு முட்டுக்கட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மல-சல கூடங்களை திருத்தி அமைப்பதற்குரிய ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் திட்டத்திற்கு சிறிலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சு முட்டுக்கட்டை போட்டுள்ளது.

சீமெந்து மற்றும் ஏனைய பொருள்களை தெற்கிலிருந்து எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு தடைவிதித்துள்ளது.

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் போதிய சுகாதார வசதி இன்மையால் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

குடாநாட்டில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்கள் அனைத்திலும் மல-சல கூடங்கள் சீரற்ற நிலையிலேயே உள்ளன.

இதனால் மலேரியா, வாந்திபேதி, வயிற்றோட்டம் போன்ற கொடிய நோய்களுக்கு மக்கள் உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையிலேயே ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு யாழ். குடாநாட்டில் ஐந்நூறு மலசல கூடங்களை திருத்தி அமைப்பதற்கு அல்லது புதிதாக அமைப்பதற்கு திட்டமிட்டது

சீமெந்து போன்ற கட்டடப் பொருள்களை வட பகுதிக்கு எடுத்துச் செல்ல முடியாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளதை அடுத்து இத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது (இ),(பா)

# போர்த் தேங்காய் அடித்தல்

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் பௌர்ணமி தினத்தில் சங்கானை மாவடி சனசமூக நிலையத்தினரால் ஆண்டுதோறும்நடத்தப்பட்டு வரும் போர்த் தேங்காய் அடித்தல் போட்டியும் நிறமுட்டி அடித்தல் போட்டியும் இன்று அந்நிலையத்தின் முன்றலில் நடைபெற உள்ளது.

# புதிய ரதம் வெள்ளோட்டம்

(தொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகுஸ்ரீ ஆதிமுத்துமாரியம்பாள் கோவிலுக்கு பல லட்சம் ரூபா செல்வில்அமைக்கப்பட்டுள்ள புதிய ரதத்தின் வெள்ளோட்ட நிகழ்வு இன்று நண்பகல் 12.00 மணிக்கு இடம் பெறும் [24]

## மீனவர் நிவாரணம் கோரி அரச அதிபர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

மீனவர் நிவாரணத்தை தொடர்ந்து வழங்குவதற்கு அனுமதி கோரி யாழ். அரசாங்க அதிபரால் கையெழுத்திடப்பட்ட கடிதம் செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய நிவாரணம் மட்டுமே பாதிப்படைந்த மீனவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

மிகுதி மாதங்களுக்குரிய நிவாரணத்தை வழங்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம் அனுமதியை இன்னமும் வழங்கவில்லை.

இதன் காரணமாக மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய நிவாரணம் பாதிப்படைந்த மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை

கடந்த மார்ச் முதலாம் திகதியிலிருந்து கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்படுவதோடு மீனவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவு நிறுத்தப்படும் என்று சிறிலங்கா அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

பாதுகாப்பு அமைச்சு விரும்பாத காரணத்தினால் கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்படாமை அறிந்ததே. இதன் பின்னர் தொடர்ந்து மீனவர் நிவாரணம் வழங்கப்படும் என வடக்கு-கிழக்கில் உள்ள சகல அரசாங்க அதிபர்களுக்கும் அரசாங்கம் அறிவித்திருக்கின்றபோதிலும் தொடர்ந்து நிவாரணம் வழங்குவதற்கு சிறிலங்கா அரசு விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரசாங்க அதிபர் சமீபத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில்-

'தொடர்ந்தும் கடல் வலயத் தடைச் சட்டம் அமுலில் இருப்பதனால் மீனவர்கள் கடல் தொழிலில் ஈடுபட முடியாத நிலை உள்ளது. இதே சமயம், கடந்த பெப்ரவரி மாதத்தின் பின்னர் மீனவர்க்குரிய நிவாரணம் வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெறாமையினால் நிவாரணத்தை தொடர்ந்து வழங்க முடியவில்லை. இதனால் பாதிப்படைந்த மீனவர்களின் நிலை மோசமாகியுள்ளது.

எனவே - தொடர்ந்து மீனவர் நிவாரணத்தை வழங்குவதற்கான அனுமதியை கோரி நிற்கிறோம்' என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி), (பா)

## இடம்பெயர்ந்தோருக்கான உணவு முத்திரை தாமதம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவச உலர் உணவு முத்திரைகள் அச்சிடுதலில் ஏற்பட்டுள்ள தாமதத்தினாலேயே உரிய காலத்தில் வந்து சேரவில்லை என தெரியவருகின்றது.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலினால் வேறு ஆவணங்கள் அச்சுப்பதிப்பு நடைபெற்றமையைத் தொடர்ந்து இவ் உலர் உணவு முத்திரைகள் அச்சுப்பதித்தலில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இருந்தும் அடுத்து யாழ்ப்பாணம் நோக்கி வருகின்ற கப்பலில் இவ் உணவு முத்திரைகள் எடுத்துவரப்படலாம் என யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இம் முத்திரைகள் வராமையை அடுத்து தற்சமயம் முன்னர் வழங்கப்பட்ட உலர் உணவு முத்திரையின் அடிக்கட்டைக்கு உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

எனினும் இம்முறையிலும் சில இடர்பாடுகள் தோன்றியுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (பா, தி)

## யாழ் மாவட்டத்திற்கு இழப்பீடு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் புனர்வாழ்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த இழப்பீட்டுத் தொகைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [illegible] யலக புனர் வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர்களுக்கான ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அவசர மரணச் செலவுப் படியாக ரூபா இரண்டாயிரமும் இறந்தவருக்கான இழப்

# புலிகளைத் தடைசெய்வது பற்றி ராவ் பேசாமல் இருப்பது ஏன்?

### ஜெயலலிதா கேட்கிறார்

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது தொடர்பாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஒன்றும் பேசாமலிருப்பதேன்? ராஜீவ்காந்தியின்தியாகத்தின் மூலம் பதவிக்கு வந்தவர்கள் இந்த விடயத்தில் மௌனம் சாதிப்பதேன்? இப்படிப் பல கேள்விகளை எழுப்பிவர் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைமேலும் இரண்டு ஆண்டுகளுககுத் தடை செய்யவேண்டும் என்ற தீர்மானத்தைத் தமிழக சட்டசபையில் சமர்ப்பித்துப் பேசிய முதலமைச்சர் மேலும் கூறியதாவது;

விடுதலைப்புலிகளைத்தடை செய்யக்கோரி நான் ஜனவரி முதல் மத்திய அரசுக்கு எழுதிக் கொண்டேயிருக்கின்றேன் இது சம்பந்தமாக மத்திய உள்துறை அமைச்சு கேட்ட விளக்கங்களுக்கு உடனுக்குடன் பதில் அளித்துள்ளோம். தமிழ்நாடு விசேட புலனாய்வுத்துறையினர் டில்லி சென்று நேரடியாகவே விளக்கமளித்தனர் இருந்தும் விடுதலைப் புலிகள் பற்றி மாநில அரசின் எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை என்று உள்துறை அமைச்சர் திரு சவான் கூறியுள்ளார்.

இது பெரும் அதிசயமான ஒன்று தமிழ்நாட்டு அரசுக்குள்ள அதிகாரத்தைக் கொண்டுவிடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைத் தடை செய்துள்ளோம். ஆனால் மத்திய அரசுதான் முழுமையான தடைவிதிக்கவேண்டும். 1967 இன் சட்டமுரணான நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் தடை செய்யப்படல் வேண்டும். இதற்கு முன்னரும் இதே சட்டத்தின் கீழ்தான் இவ்வியக்கம் தடைசெய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல காஷ்மீர் முதல் ஆந்திர பிரதேசிற்கும், பஞ்சாப் முதல் அஸாம் வரையுள்ள 'பயங்கரவாத' குழுக்களுடனும் தொடர்பு வைத்துக்கொண்டுள்ளது விடுதலைப் புலிகளின் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை மட்டுமல்லஇது லண்டன், பாரீஸ், பொன், ஜெனீவா, அமெரிக்கா ஆகிய இடங்களையும் தளமாக வைத்துள்ளது மத்திய அரசு விடுதலைப் புலிகளின்எல்லாப் பிரச்சினைகளையும் தமிழ்நாட்டு அரசின்தலையில் போட்டுள்ளது என்றார்

## தெருக்கூத்து

மே நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக திவகப் பிரிவினால் தெருக்கூத்து ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது. தொழிலாளர்கள் மறுக்கப்படும் தமது உரிமைகளை வென்றெடுக்க ஒன்று சேர்ந்து போராடுதல் அவசியம் என்பதை விளக்கும் வகையில் அமைந்த இத் தெருக்கூத்து குடாநாட்டு வீதிகளிலும் தீவக மக்கள் தங்கியுள்ள முகாம்களிலும் பரவலாக நடாத்தப்படவுள்ளதாக தீவக கலை பண்பாட்டுக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஒன்றுகூடல்

வலி வடக்கு பிரதேச சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் ஒன்றுகூடல் நாளை மறுதினம் 27-ம் திகதி மாலை

# உண்மையான செயற்பாடின்றி இனப்பிரச்சினைக்கு தீர்வில்லை

### - பாராளுமன்றில் சு. க. எம். பி

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கம் செய்வதை அமைச்சர்களோ அதிகாரம் குறைவதை அதிகாரிகளோ விரும்பாத நிலையில் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்பட முடியும் என்று சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்ற விவாதமொன்றில் கலந்து கொண்டுபேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், இனப்பிரச்சினை தீர்வுக்காக பண்டா-செல்வா ஒப்பந்தம், வட்டமேசைமாநாடு, தெரிவுக்குழு எனப்பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன எனினும் உண்மையான செயற்பாடு இன்மையால் அனைத்தும் வீணாகின. அமைதியை விரும்பினால் அதிகார பரவலாக்கத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வடக்கு மீதான

சாங்கத்தை மீண்டும் கைப்பற்றுவது ஐக்கிய தேசிய கட்சியின் நோக்கமாக இருந்தது.

இத் தென்மாகாணசபைத் தேர்தல் தோல்வியின் பின்னர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை வெளியேற்றக் கோரி கட்சிக்குள்ளேயே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்ததை தேசிய புலனாய்வுப் பொலிசார் என் ஐ. சி. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின்கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் புலிகள் உடனான பாரிய யுத்தத்தில் அரசு தோல்வியடையும் பட்சத்தில் ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவைக் கொல்வதற்கு கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் பலர் கங்கணம்கட்டியிருந்தனர் என கூறியுள்ளனர் இவர்களது கருத்துக்களையும் கட்சியினுள் உள்ள எதிர்ப்புகளையும் சீர்தூக்கிப்பார்த்த ஜனாதிபதி வடபகுதி மீதான இராணுவ நடவடிக்கையை சற்றுப்பின் போடுமாறு பாதுகாப்பு அமைச்சிற்கு உத்தரவிட்டார் வடபகுதி மீதான தனது இரும்புப்பிடிக் கொள்கையைச் சற்றும் தளர்த்த தேர்தல் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த ஆண்டில் புலிகளை அழித்துவிட்டு தேர்தலைச் சந்திப்பதென அவர் கங்கணம்கட்டியிருந்தார்

இப்போது வேறு விதத்தில்

தற்போது யாழ் குடாநாட்டில் கிட்டத்தட்ட 60 ஆயிரம் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர் இதைத்தவிர கடற்படை, விமானப் படை, பொலிஸ் ஆகியவற்றைச் சேர்ந்த 15 ஆயிரம் பேர் உள்ளனர். இப்படையை ஒரு லட்சமாக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதே பாதுகாப்பு அமைச்சின் நோக்கமாகும். வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக வடபகுதி இராணுவ வலயம் அமைக்கப்பட்டுள்ளது

இதைத் தவிர கிழக்கு மாகாணத்திலிருந்த இராணுவத்தினர் குறைக்கப்பட்டு அவர்கள் வடக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக பொலிசாரும் விசேட அதிரடிப்படையினரும் அங்கு நிறுத்தப்பட்டு அங்கு கடமையிலிருந்த 7 நிரந்தர பட்டாலியன்களும் 5 தற்காலிகபட்டாலியன்களும் வட பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இதே வேளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலிருந்த 7 பட்டாலியன்களும் 2 தொண்டர் பிரிவு பட்டாலியன்களும் வட பகுதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதா

## பாடசாலை விபரம் திரட்ட அமைச்சு நடவடிக்கை

(நல்லூர்)

இவ்வாண்டுக்கான அனைத்துப் பாடசாலைகள் பற்றிய தொகை மதிப்பீடு விபரங்களை கோட்டக் கல்வி அலுவலகங்கள் ரீதியாக திரட்டும் முயற்சியில் மத்திய கல்வி அமைச்சு நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாக கல்விஅமைச்சின் கொள்கைத்திட்டமிடல் மீளாய்வுப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் யு.எஸ். பி. சேனாரத்ன சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதனை பூரணமாக நிறைவேற்றும் பொருட்டு, 1994 ஆம் ஆண்டு யூன் முதலாம் திகதிக்குரிய தகவல்களை உள்ளடக்கியதாக பாடசாலையின்பெயர், போதனாமொழி, பாடசாலையில் உள்ள மாணவர்களினது மொத்தத் தொகை, பாடசாலைகளிலுள்ள வகுப்பு, பிரிவுகளின் மொத்தத் தொகை ஆகியவைகளை திரட்டி தமக்கு அனுப்பி வைக்குமாறு மேலும் அவர் கேட்டுள்ளார். (17)

## கண்டெடுப்பு

யாழ்ப்பாணம் அருச்சுனா வீதியில் இலங்கை வங்கிக்கு அருகே திறப்பு ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## கலைநிலா அரங்கு

(குருநகர்)

நாளை மாலை 6.45 மணிக்கு யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்ற கலையரங்கில் கலைநிலா அரங்கு நடைபெறும்.

மாதாந்தப் பாடல், கிற்றார் இசை, புனித சூசையப்பர் அமலமரித் தியாகிகள் குருமட மாணவர்கள் வழங்கும் 'அருட்கரம்' (மன்னார் பாங்கு நாட்டுக் கூத்து) ஆகியன இடம்பெறும். (21)

## மாநகரஉறுப்பினர் கொலை மருத்துவ மாணவன் கைது

[மாத்தளை]

மாத்தளை மாநகர சபையின் ஐ. தே க. உறுப்பினரான ஜனாப் ரஹ்மான் ஹீசேன் சுட்டுக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள ஸி ஐ. டி. விசேட குழுவினர் குண்டசாலையைச் சேர்ந்த மருத்துவ மாணவன் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

ஹீசேனின் வீட்டுக்கு வந்த கொலைஞர்கள் உபயோகித்த மோட்டார் சைக்கிள் தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ள மருத்துவ மாணவனுக்குச் சொந்தமானதாகும் என்று ஸி- ஐ- டி அதிகாரிகள் தெரிவித்தனர்-

ஹீசேன் கடந்த 2-ம் திகதி மோட்டார் சைக்கிளில்வந்த [illegible] டார் சைக்கிள் எங்கிருந்ததென்பது பற்றியும் இதற்கு பயன்படுத்தப்பட்ட இலக்கத் தகடு போலியானதெனவும் ஸி, ஐ, டி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இக் கொலை தொடர்பாக ஹீசேனின் குடும்ப உறுப்பினர்கள், மாத்தளை மாவட்டத்திலுள்ள பல்வேறு அரசியல்வாதிகள் உட்பட 50 க்கு மேற்பட்டவர்களை ஸி, ஐ, டியினர் விசாரித்துள்ளனர்.

## கிரிக்கெட்

நேற்றும், நேற்றுமுன்தினம் நேரம் போதாமையால் ஒத்தி வைக்கப்பட்ட இரு போட்டிகளும்நடைபெறவுள்ளன.

இழப்பீட்டுத் தொகைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கையினால் இறந்த ஒருவரின் குடும்பத்தினருக்கான அவசர மரணச் செலவுப் படி மற்றும் இறந்தவருக்கான இழப்பீட்டுத் தொகை என்பனவே நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ் செ

யாக ரூபா இரண்டாயிரமும் இறந்தவருக்கான இழப்பீட்டுத் தொகையாக ரூபா ஐம்பதினாயிரமும் வழங்கப்பட்டு வந்தது.

இவ் இழப்பீட்டுத் தொகை இனிமேல் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்படுகிறது. (பா (தி)

யினரின் ஒன்றுகூடல் நாளை மறுதினம் 27-ம் திகதி மாலை 4.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இதில் 90, 91, 92, 93 பழைய புதிய அங்கத்தவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

---

**ஆறு**

யின் மே நாளில் முக்கிய இடம் பிடிக்கும் எனக் கூறப்படுகிறது.

---

**தனியார்**

என்றும் அமைச்சு நம்புகிறது. பெரும்பாலும் தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதில் அமைச்சு தீவிர கவனம் செலுத்துகிறது.

யிருந்தார்

இப்போது வேறு விதத்தில் யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை மேற்கொள்ள ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா திட்டமிட்டு வருவதாகத் தெரியவருகிறது.

வடபகுதி மீதான இராணுவ நடவடிக்கைக்கு முன்னோடியாக அங்கு கிட்டத்தட்ட ஒரு இலட்சம் துருப்புக்களை நிலைநிறுத்த வேண்டும் என்பதே பாதுகாப்பு அமைச்சின் திட்டமாகும். தற்போது வடபகுதியில் 35 நிரந்தரபட்டாலியன்களும் 9 தற்காலிகபட்டாலியன்களும் நிலை கொண்டுள்ளன. இதுதவிர மணலாறில் 7 பட்டாலியன்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எல்லாமாக 51 பட்டாலியன்கள் வடக்கில் தற்போது நிலைகொண்டுள்ளன ஒருபட்டாலியனில் 1200 வரையான இராணுவத்தினர் உள்ளனர்.

டாலியன்களும் வட பகுதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் இதுவரை 12 ஆயிரம் இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**இரகசிய**

பல் வேறு அறைகளில் பல தமிழ் இளைஞர்கள் நீண்ட நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டவர்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையோர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

**யாழ்.**

லாத நிலையில் பல நோயாளர் உயிர் இழக்க வேண்டி வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [நி]

ஹீசேன் கடந்த 2-ம் திகதி மோட்டார் சைக்கிளில்வந்த இருவரினால் இவரது மாமனார் வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் காயமுற்ற மாமனார் கண்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பயன் படுத்தப்பட்ட மோட்

வைக்கப்பட்ட இரு போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இன்று காலை தொடக்கம் ஆரம்பமாகவுள்ள இப்போட்டிகளில், ஜொலி ஸ்ரார்ஸ், கொக்குவில் சி. சி. சி. (ஏ) ஷப்றா, ஜொனியன்ஸ், கிராஸ்கொப்பர்ஸ் மற்றும் ஒல்ட் கோல்ட் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன.

---

## 70ஆவது
## பிறந்த நாள் வாழ்த்து

### திரு. செல்லையா தம்பிராசா

திரு. செல்லையா தம்பிராசா தனது 70 ஆவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக 25-4-94 இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவர். இவரை பிள்ளைகளான சாரதாம்பாள் (கனடா), குழந்தைவேல் (சிவசண்முகராஜா அன் கோ, கொழும்பு) தில்லைநாயகி (சாவகச்சேரி), சிவசோதி (ஜேர்மனி), தர்மபாலன் (பிரான்ஸ்), குகனேசன் (சன்றைஸ் றேடர்ஸ், சாவகச்சேரி), தயாளினி (சாவகச்சேரி), மருமக்களான விசாகப்பெருமாள் (சாவகச்சேரி), குணபூசணி (கொழும்பு), முத்துலிங்கம் (சாவகச்சேரி), கிருஸ்ணலிங்கம் (ஜேர்மனி), ராகினி (பிரான்ஸ்), பவானி (சாவகச்சேரி), ரவிந்திரன் (சாவகச்சேரி), பேரப்பிள்ளைகளான இராசேஸ்வரன், (கனடா), பவானி, ஞானேஸ்வரன் (லண்டன்), இராகினி, சதீஸ்வரன், ரோகினி (கனடா), கொழும்பிலுள்ள சைலஜா, நிலானி, நித்தியா, சுபேந்திரன், நீலலோஜனி, விஜயராஜ் (லண்டன்) சாவகச்சேரியிலுள்ள விஜயதாஸ், விமலதாஸ், விஜித்தா, வினோதா, வனஜா, கானுஜா, மிதுலா வர்சிகா, மிதுனன், கர்சனா, சபீலன், ஜேர்மனியிலுள்ள லாவண்யா, கிரிசாந்தினி, கஜனி, கஜிலன், பிரான்ஸ்சிலுள்ள ரஜீவ் ஆகியோர் இவரைச் சீரும் சிறப்பும் பெற்று நூறாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

டச் வீதி,
சாவகச்சேரி.

"நாகதீபம்"

(சி-9261)

---

**யாழ் ஸ்ரீதர்**
**திரையரங்கில்**

**SYLVESTER-STALLONE**

நடித்த

**RAMBO**

தினசரி மாலை
4.00, 6.00
சனி, ஞாயிறு காலை
10.30
மாலை
4.00, 6-00 மணி

**பெப்ரவரி 94**
**ஒளிவீச்சு**

சனி, ஞாயிறு பி. பகல்
2-30 மணிக்கு
காண்பிக்கப்படும்
(சி-9250)

---

மதுரா ஆதரவாளர்களின்

## பரிசுத்திட்ட சிட்டையின்
## அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு; 2889 தங்கப்பதக்கம்
2ஆம் பரிசு: 3873 5000/-
3ஆம் பரிசு: 105 2500/-

**ஆறுதல் பரிசுகள் - 10**

(1) 11674 (2) 1883 (3) 8131 (4) 2356
(5) 667 (6) 11912 (7) 5480 (8) 7673
(9) 5664 (10) 6575.

குறிப்பு: பரிசுத்திட்ட குலுக்கலில் தெரிவான அதிர்ஷ்டசாலிகள் மதுரா பட்டு மகாலில் சிட்டைகளைக் காட்டி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## மதுரா பட்டு மகால்

**75, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

(சி-9257)

---

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் தெய்வானை

வேலணை 6ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்தவரும் தற்போது மட்டுவில் தெற்கில் வசிப்பவருமான திரு. ஆறுமுகம் (சமாதான நீதிபதி) அவர்களின் அன்பு மனைவி தெய்வானை 24-4-1994 அன்று காலமாகிவிட்டார். இவர் பாலசுப்பிரமணியம், தெய்வேந்திரம் இராஜேந்திரம், பாலேந்திரன் (U. K), தவமலர், இரஞ்சிதமலர், குலேந்திரன் (பாங்கொக்), சிவனேந்திரன் (யாழ் பனை தென்னை வள அபிவிருத்தி சங்கங்களின் கொத்தணி), முருகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், நகுலாம்பிகை, கோகிலகுமாரி, தில்ல நாயகி, பரமேஸ்வரி (U. K), சிவசுப்பிரமணியம், பேரம்பலம் (யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தவச்செல்வி, தவச்செல்வன், மலர்ச்செல்வி, சிறீதனபதி, சதீஸ், கோகிலா, விஜிதா, தர்சன், வசீகரன், சரிதா (U. K), சாளினி (U. K), சஞ்சை (U.K), மோகன காந்த், அகல்யா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். காலஞ்சென்ற சண்முகம், செல்லாச்சி, மாணிக்கம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 25-4-1994 திங்கட்கிழமை இன்று முற்பகல் 10.00 மணிக்கு மட்டுவில் தெற்கிலுள்ள அன்னாரது மகளது இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.
க. வாமதேவன்
கிராம உத்தியோகத்தர்,
மட்டுவில் மத்தி-சந்திரபுரம்.

(8128)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.